KALANILAYAM

தனிப்பிரதி விலை 0-2-6 அணா.

# கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

உள் நாடு—வருஷ சந்தா ரூ. 7 0 0
புற நாடு—வருஷ சந்தா ரூ. 9 0 0

கலாநிலயம் :—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol. 8] 1935 ஞு ஏப்ரல் மீ 11 உ [No. 15

## பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 225
2. வில்லிபாரதம் (வீமார்ச்சுனர்)
K. T. விஜயராகவாச்சாரியார் B.A. 227
3. ஒத்தெல்லோ (அங்கம் 2. களம் 1.)
Shakespeare's "Othello" 229
4. நம்மாழ்வார் வைபவம் (7-ம் பத்து, 5-ம் தசகம்)
K. இராஜகோபாலாச்சாரியார் B.A., B.L. 232
5. நரவாகன தத்த சரிதம்
S. சோமசுந்திர தேசிகர் 233
6. கம்பர் சிருட்டியிற் பிறந்த கற்பினுள்
K. நாராயண ரெட்டிகாரு 236
7. சூரியன் (சூரிய குடும்பம்—புதன், வெள்ளி)
E. T. இராஜேஸ்வரி அம்மாள் M.A.,L.T., 238
8. வர்த்தமானம் 240

## கலாநிலயம்

### வழியும் வகையும் 4.

ஒன்றினுற் சாவதோ, அல்லது, ஒன்றன்பொருட்டுச் சாவதோ, அதுவே கேள்வி. ஒருவன் வாழ்வதும் வாழாததும் இந்தக்கேள்விக்கு அவன் தரும் விடையைப் பொருந்தியிருக்கின்றது. உயிரோடிருந்துவாழ்வது கடியதான காரியமென்றும், இறப்பதே எளியதென்றும் இயம்புவார் எத்தனையோ பலர். ஆழ்ந்து நோக்குங்கால், இது நேரான நினைவுஅன்று என்பது புலப்படும். சாவதா எளியது? மானுடமேன்மையின் சிகரமன்றோ அம்மரணம்! அதனை எய்தவல்ல பாக்கியம் அனைவர்க்கும் வாய்த்தல்அரிது. அஞ்சியஞ்சிக் கிடந்து ஐயோவென்றலற உடல்விறைத்து ஓய்வதெல்லாம் அழுகியழுகி வீவதன்றிச் செம்மைசேர் மரணமாகாது. அப்படியேதான், உண்டுகிடக்கவே உழன்ற நாட்களோ வாழ்ந்த நாட்கள் என்னத் தகுவனவும் ஆகா. விலங்கிற்கும் வாய்க்கும்அது. இப்படியே நாட்களைக் கடத்துவதெனில், இறுதியில் உடல் அழுகுவதற்கு முன்னரே அன்றன்று சிறிது சிறிதாக உயிர் அழுகி யழுகியே தீர்ந்தாய்விட்டது. அழுகிய உயிர் எவ்வாறு சாதல் கூடும்? வாழ்ந்த நாளெல்லாம் வீரர்களாய் வாழ்ந்து ஒருநாள் ஒன்றன்பொருட்டு முழு உயிரையும் விடுகின்ற விழுப்பமே சாவு என்னுஞ் சொல்லின் சிறப்பிற்குரியதாம். வாழ்வாங்குவாழ்ந்தவர்களே சாவதற்கும் உரியவர். இவ்வாறு மாண்டவரோ என்று மிருந்தவராவர். இந்த நுட்பத்தைத் திருவள்ளுவரே போன்றவொரு மெய்யுணர்வுடையவர் எடுத்துக்காட்டுமுன் ஏனையோர் எங்ஙனம் காணவல்லார்.

> நத்தம்போற் கேடு முளதாகுஞ் சாக்காடும்
> வித்தகற் கல்லா லரிது

[இலாபமாகின்ற நஷ்டமும் சிரஞ்சீவியாகின்ற சாவும் சிறந்த வித்தகர்களுக்கே வாய்க்கும்; அல்லாது, ஏனையோர்க்கு வாய்க்காது.]

என்னுங் குறளில் அடங்கிய மெய்ம்மையைச் சிந்தித்துச் சிந்தித்து நம்முடைமை யாக்கிக்கொள்ள ஒரு ஆயுள் போதாது. சாக்காடு வித்தகற்கல்லால் அரிது; இது சரதம். சாக்காடு வித்தகற்கல்லால் அரிது-இந்த வாக்கியம் ஒருவன்உள்ளத்தில் இடைவிடாமல் உலவிக்கொண்டிருக்குமாயின் பின் அவன் உய்ந்துவிட்டான். வகையறிந்து செத்தவனே வித்தகன், சாகும் வழிதேடி அழுகுபவன் இழுதை. தாம் சாவதற்கு உரிய ஒன்றன்பொருட்டு வாழ்கின்ற வாழ்க்கை வித்தக உத்தமர்க்கல்லாமல் வாய்க்குமோ!

அழுகிப் புழுக்காமல் உயிர்மாய்ந்து நீங்கவேண்டுமாயின், நாம் எதன்பொருட்டு மாளவும் மாள்வோமோ அதன்பொருட் டன்றி வேறொன்றற்காகவும் வாழ்தலாகாதுஎன்னும்இலக்கணத்தைச் சிறிதுமுன் இங்கு இயம்பினோம். இவ்வாறு நாம் வாழ்கின்றோமோ இல்லையோ என்று நாம் நம்மையே அடிக்கடி ஆழ்ந்து சோதித்துக்கொள்ளல் வேண்டும். இந்தச்

சோதனைக் குதவியாகும்படி இரண்டொரு விடயங்களைக் கருத்திற் கொள்ளுதல் நலம்.

தன்னுடைய சுகத்தின் பொருட்டு வாழ்வதாக நினைப்பதன் அவலச்செய்தியைமுன்னரே காட்டியுள்ளோம். சுகத்தின் பொருட்டு வாழ்கின்றேன் என்பவன் அதன்பொருட்டு இறக்க இயலாதாதலின் அச்சொல் செல்லாதென்பதை உணர்ந்துகொள்ளல்அருமையன்று. சுகம் என்பது அதன்பொருட்டு மாள்வதற்குரியதொன்று அன்று; ஆதலின், சுகத்திற்காக வாழ்வதாக நினைத்து விவகரிப்பதெல்லாம் வீணாகி விடுகின்றது. அன்னவன் ஆயுள்காலமெல்லாம் தனக்குந் துன்பமாய்ப் பிறர் துன்பங்களுக்குங் காரணமாயலைந் தலைந்து கெடுகின்றான்.

மனைவிமக்களின் பொருட்டுத் தாம் வாழ்வதாக எண்ணியிருப்பார் எத்தனையோ பலர். அது உண்மையாயின் அன்னவாறு வாழ்தல் தூயதே. எனினும், சுயஆராய்ச்சியில் பயின்றிருந்து அதன் முடிவுகளைக் கற்றுஇலாதவர் பெரியதோர் மயக்கத்திற்குத்தம்மை ஆளாக்கிக்கொள்வதும் இயலும். மனைவிமக்களின் பொருட்டே தான் இருந்து விவகரிப்பதாக இவன் சொல்லவும்,ஓரளவு நினைக்கவும்,நேரலாம். ஆயினும் அந்தரம்நோக்கின் இவனது உள்ளத்தில் கரந்திருக்கும் நோக்கமோ இதற்கு முற்றிலும் மாறானதொன்றாக இருப்பதே பெரும்பாலும் இயற்கை. தன் பொருட்டே, மனைவிமக்களுடன் ஏனைய இடம்பொருள் ஏவல்களாகிய அனைத்தும் இருத்தல்வேண்டுமென்ற எண்ணத்தினனாகவேஇவன் முடிவதுபுலப்படும். இதனை வெளிப்படையாக விளம்பி, "என்னுடைய சுகத்திற்கு இல்லாத மனைவியும் மக்களும் இருந்தென்ன, தொலைந்தென்ன" வென்று வெறுத்துரைப்பார் சிலரல்லர். இங்ஙனம் விளம்புகின்றவர்களை மூர்க்கரென்று அழைக்கின்றவர் பலர் உள்ளத்திலும்அதே கருத்துக் கிடந்து உழல்வதும் புதுமையன்று. உண்மையில் ஒருவன் மனைவி மக்களின் பொருட்டு வாழ்வானால் அவன் அவர்பொருட்டு மாள்வதற்கும் ஆயத்தமாய் இருத்தல்வேண்டும். அதுவே அதற்குக் கட்டளைக்கல். அப்படியாயின் அவன்வாழ்கின்றான், சாக்காடு வாய்க்கவல்ல வித்தகனுமாவான். கொலைக் குற்றத்தின் தண்டனையாக ஒருவன் தூக்கிலிடப்படுவானாயின், அவனது மனைவி மக்களுக்கு உணவும் உடை வீடுமுதலியனவும்கொடுத்து அரசாங்கத்தார் காப்பாற்ற வேண்டுமென்றவொரு சட்டம் ஜர்மனி தேயத்தில் சிலகாலத்திற்குமுன் நடையிலிருந்தது. எத்துணை முயன்றும் மனைவி மக்களைக் காப்பாற்றுவதற்குப் போதிய வருவாய் பெறமாட்டாமல் வருந்திய ஒருவன், தான் செய்யாத கொலையொன்றின் குற்றத்தைத் தானே செய்ததாகச் சுமத்திக்கொண்டு, அந்தச் சட்டத்தின் உதவியைத் தன் மனைவி மக்கள் அடையும்படி, தூக்குமரமேறினான், என்னுமச்சரிய செய்தி சிலருக்குத் தெரிந்திருக்கலாம். இவ்வகையில் இன்னவர்தாம் தம் குடும்பத்தின்பொருட்டு வாழ்ந்தவர் எனத் தகுபவர்.

கலையின் பொருட்டுக் கல்வியின் பொருட்டு வாழ்கின்றேன் என்பார் ஒருசிலர். அது உண்மையாயின் அதன் பொருட்டு அவர் சாவதற்காயத்தமாயிருத்தலும் வேண்டும். அவ்வாயத்தம் இல்லையாயின், கலையின்பால் அவர் கொண்டதாகக் கூறுவதத்தனையும் போலியே. காளிதாஸன்வாயினின்று தன் சரமகவியைப் பாடக்கேட்கவேண்டுமென்றுஉயிரினை உகுக்கநேர்ந்தபோஜராஜனனையவர்களேகலையின்பொருட்டு வாழ்ந்தவர் என்று இயம்புவதற்குரியவர். தமிழரசர்களிலும் இங்ஙனம், புலவர் வாய்வரு பாடல்களைக் கேட்கத் தம் உயிரை நீத்தவர்கள் உளர்.

பிறருக்கு உபகாரம் செய்யும் பொருட்டு வாழ்வதாகக் கூறுவோர் எண்ணிறந்தோர். இன்னவர்களிற் சிலர் அன்னவாறே நினைத்துக்கொண்டுமிருக்கலாம். இது உண்மையாவதுமாகாததும் நாமிங்கு அமைத்திருக்கின்ற கட்டளைக் கல்லின்மேல் தேய்த்த பின்னரே தெரியவரும். விபீடணனுக்கு அடைக்கலம் அளித்தா லவனது வஞ்சனையால் தமக்குத் தீமையே விளையும் என்று மந்திரங் கூறியோர்க்கு இராமன்,

பிறந்தநா டொடங்கி யாருந்
துலைபுக்க பெரியோன் பெற்றி
மறந்தநா ளுண்டே யென்னைச்
சரணென்று வாழ்கின் றானைத்
துறந்தநாட் கின்று வந்து
துன்னினான் சூழ்ச்சி யாலே
இறந்தநா ளன்றே யென்று
மிருந்தநா ளாவ தென்றான்

[ஒரு புறவின்பொருட்டுத் தராசுத்தட்டில் ஏறிய பெரியோனாகிய சிபி சக்கிரவர்த்தியின் செய்தியைப் பிறந்த நாள் தொடங்கியாரேனும் மறந்தது உண்டோ. என்னைச் சரண்வந்து அடைந்தவன் எனக்கு வஞ்சனை செய்வான் என்று அஞ்சி அவனைத் துறந்தநாளிலும், அப்படிஅடைந்தவனது வஞ்சனையினால் இறந்தாள் அன்றோ என்றென்றும் இருந்தநாள் ஆவது - என்றான்.]

என்று பின்னரும்,

பேதையைப் பிடித்துத் தன்னைப்
பிடிக்கவந் தடைந்த பேதை
வேடனுக் குதவி செய்து
விறகிடை வெந்தீ மூட்டிப்
பாடுறு பசியை நோக்கித்
தன்னுடல் கொடுத்த பைம்புள்
வீடுபெற் றுயர்ந்த வார்த்தை
வேதத்தின் விழுமி தன்றோ

[பெண்பறவையைப் பிடித்துக் கூட்டில் அடைத்துப் பின் தன்னையும் பிடிக்க வந்து அடைந்தவொரு பேதை வேடனுக்கு உதவிசெய்து விறகுகூட்டி வெம்தீ மூட்டி, அவன் படுகின்ற பசியைப் பார்த்துத் தன்னுடைய உயிரைக் கொடுத்த பெண்பறவையானது நற்பதவி பெற்று உயர்ந்தவார்த்தையானது வேதத்தினும்விழுமியதன்றோ]

என்று, பரோபகாரத்திற்காக வாழ்வதாயின் அதன் பொருட்டுச் சாகவும் நேர்கின்ற தன்மையை விளக்கியிருக்கும் இவ்வதந்தி, பிறந்தநாள் தொட்டு யாரும் மறக்கற்பாலதன்று. எனினும் இதனுடன் வேறொன்றும் நினைவிற்கொள்ளல்வேண்டும். "எதன்பொருட்டு நீ சாவதற்கு ஆயத்தமாயிருக்கின்றாயோ அதன் பொருட்டு அல்லது வேறொன்றிற்கு நீ இருப்பாயாயின்

M211,N28kn
N35.2.15
199213



அதுதான் உயிர்சுமக்கும் அடிமைக்கயமையேயன்றி வாழ்கின்ற வீரமோ ஆகாது" என்னப் பகரும் இவ்வாசகத்திற்கும், ஒன்றற்காகத் தன்னுயிரைத் தியாகம் செய்வதென்னும் கருத்திற்கும் வேற்றுமையோ பெரிதுளது. ஒரு கொள்கையின்பொருட்டு அல்லது தம் நாட்டின்பொருட்டு மதத்தின்பொருட்டுத் தம் உயிரைச்சென்று உகுத்துவிடுகின்றார் சிலர். நோக்கம் உண்மையாயின் இம்மரணமும் மேலதே. ஆயினும் இது சாகின்ற வீரம் ஆகுமேயன்றி வாழ்கின்ற வீரம் என்று உரைப்பதற்குரியதாவது, சிற்சில அமயங்களிலன்றி, பெரும்பான்மை அரிதேயாம். ஒன்றன்பொருட்டுச் சாவதைக்காட்டிலும், சாவதற்கு முரியதாகிய ஒன்றன் பொருட்டு வாழ்தலே கடியதாகும். இக்கடமைக்குரிய வீரம் படைத்தவர் தன்மை பின்னுஞ் சிறிது உயர்கின்றது. இதுபற்றி மாரிஸ் மேடர்லிங்க் வரைந்துள்ள சில உறுதிமொழிகள் உட்கொள்ளத் தக்கன :—

It is easier far, as a rule, to die morally, nay, even physically, for others, than learn how best we should live for them. There are too many beings who thus lull to sleep all initiative, personal life, and absorb themselves wholly in the idea that they are prepared and ready for sacrifice. The consciousness that never succeeds in travelling beyond that idea, that is satisfied ever to seek an occasion for giving all that which it has, is a consciousness whose eyes are sealed, and that crouches benumbed at the foot of the mountain. There is beauty in the giving of self, and indeed it is only by giving oneself that we do at the end begin to possess ourselves somewhat; but if all that we some day shall give to our brothern is the desire to give them ourselves, then we are surely preparing a gift of most slender value. Before giving let us try to acquire; for the last is a duty wherefrom we are not relieved by the fact of our giving. Let us wait till the hour of sacrifice sounds, till then each man to his work. The hour will sound at last; but let us not waste all our time in seeking it on the dial of life.*

எனின், உயிரைத் தியாகஞ் செய்வதற்காக வாழ்கின்றேன் என்ற நிலையும், சாகும்வழி தேடும் ஏனையவைகளோடு ஒத்து நிற்கின்றது. 'சாக்காடு வித்தகற் கல்லால் அரிது' என்ற அத்திருவள்ளுவர் இதனை நினைத்துஇயம்பினாரென்றெண்ண இடமில்லை."வசையொழிய வாழ்வாரே வாழ்வார்" என்ற குறளினோடு ஓரதிகாரத்தில் நிற்கும் அக்குறள், வித்தகர் எய்தும் சாக்காடை வாழ்க்கையில் வைத்துப் பேசுகின்றது. சான்றோர், ஒன்றினால் சாதற்குக் காத்திரார்; ஒன்றின் பொருட்டுச் சாவாருமல்லர்—சாதற்கு முரிய ஒன்றன்பொருட்டேயன்றி வேறொன்றனையும் பற்றி வாழாதவர்.

* இவ்விடயங்கள், 1932 வருடத்திய "வித்தகமோ விதிவசமோ" என்னுந் தலையங்கங்களின், 21, 22-வது இதழ்களில் விரிவாக ஆராயப்பெற்றிருக்கின்றன.

# வில்லி பாரதம்

[185-வது பக்கத் தொடர்ச்சி]

## வீமார்ச்சுனர்.

இவ் விருவரில் பின்னவனைப் பற்றி முதலில் கருதுவோம். இவனையே பாரத கதா நாயகனென்று கூற முற்படுவர் சிலர். பாரதப் போர் தருமனது அறத்தைக் காப்பாற்றவே நிகழ்ந்ததெனினும்,விசயனுக்கிருந்த 'ஒளி' தருமராசனை நாம் செவ்விதாகக் காணவொட்டாதபடி மறைக்கிறதென்றும், ஆதலின் குணசாலிகள்பலர் இருக்கிற இப்பாரதத்தில் விசயனையே நாம் கதா நாயகனாகக் கொள்ளலாம் என்றும் திருவாளர் E. N. தணிகாசல முதலியாரவர்கள் சென்றவாண்டு 40-ம் இதழில் எழுதியதும், அதில் அபிப்பிராய வேற்றுமை கொண்டு நான் சென்றவாண்டு 44-ம் இதழில் கூறியதும், அதற்கு ஐய நீக்கும் மறுமொழியாக இவ்வாண்டு இரண்டாம் இதழில் 'நாரணன் விளக்கமும் நாவுக்கரசரும்' என்னும் கட்டுரையைத் திருவாளர் அவர்கள் எழுதியதும் வாசகர்களுக்கு நினைவிருக்கலாம். 'ஒரு கதையின் நாயகர் யாரென்பது நிச்சயிப்பது இன்றியமையாததா; அதற்கித்துணை வாதமேன்?' என்று நண்பர்கள் கருதக்கூடும். ஆனால் குணசாலிகள் பலர் நிறைந்த இவ்விதிகாசத்தில் கதாநாயகன் யார் என்பதை நாம் நிர்ணயிப்பது, நாம் அந்தக்கதையின் உட்பொருளாக அறிந்த விஷயங்களைப் பொருத்ததாகும். அதாவது, பாரதக் கதையின்உட்பொருள் அதில்நடக்கும் போரின் விந்தையென்று எண்ணினால், விசயனையே நாம் கதாநாயகனாகக் கருதத் தடையில்லை; அன்னவாறே அம் மாபெருங் கதையின் உட்பொருள் அறம் மறத்திற்கு எதிர்நின்று போர்ஆற்றிய பெருமையெனின், அவ்வறத்தின் சார்பாக நின்று, ஆற்றி, அவ்வறமே உருக்கொண்டது போன்று விளங்கிய அத்தருமனே கதாநாயகனென்று கூறலாம். வேறு சிலர் கன்னனைக் கதாநாயகனாகக் கூறுவர். அவர்களின்படி, பாரதம் நம்க்குண்மை செய்ந்நன்றி முதலிய பல அரிய குணங்களைப் போதிக்கும் நூலாதலின், அப்பண்புகள் மிகுதியும் வாய்ந்த கன்னனே இக்கதையின் நாயகன் என்பதாம். * ஆதலின் இப்பாரதத்தின் கதாநாயகன் யாரென்று குறிப்பது, இந்நூலின் உட்பொருள் யாதாமென்று நாம் தெளிந்ததைப் பொருத்ததாகும்.

* வான்மீகி இராமாயணம் பல நீதிகளைப் போதிக்கும் நூலாதலின், அந்நீதிகளைச் சொல்லாலும் செயலாலும் ஆற்றுகிற இராமன் அந்நூலின் கதாநாயகன் என்பதிற் றடையில்லை.

தமிழ்க்காப்பியங்களுக்குத் தலைவன், ஒத்தாரு மிக்காரு மில்லாத தனித்தலைவனாக இருக்கவேண்டியது அவசியமாதலின், தருமனை அன்னவாறு கருதுவதற்கிடமில்லாமை பற்றி, அவனைத் தலைவனாகக் கருதல் ஆகாதென்பர் திருவாளர் முதலியாரவர்கள். அப்படியாயின் அருச்சுனன் மாத்திரம் ஒப்பாரும் மிக்காருமில்லாதவனா? வில் வலியில் அவனுக்கு ஒப்புயர்வாக ஒருவரையும் கூறுதற்கில்லை என்பது உண்மையாயிருக்கலாம். ஆயினும் தருமனும், அவ்வாறே தனது அருட் குணத்தாலும் அறநெறியினாலும் யாவரினும் சிறந்து விளங்குபவனன்றோ? இன்னும் கூறப்புகின், அருச்சுனனது வில்வல்லபம், அபிமன்யு துரோணர் வீடுமன், முதலியோர்க்கும் உண்டேயன்றி, தருமன்றன் நெறிசேர் பண்பிற்கும் அருட்குணத்திற்கும் சிறிதேனும் உவமை காட்ட வீடுமனையேனும், விதுரனையேனும் குறிக்க இயலாது. ஆதலின் தனித்தலைவன் யாரென்றுகருதுமளவினில்ஒருவகையில்,தருமனைச் சொல்லலாமேயன்றி விசயனைச் சொல்லலாகாதென்பது வெளிப்படை.

மேலும் நம்முதலியாரவர்கள், 'விசயன் நிவாதகவசரை வதைசெய்தான், அவனில்லாவிட்டால் நிவாதகவசரது வதைநேர்ந்திருக்குமோ, தருமனுக்கு அத்தகைய வலிமை இருப்பதாக அவன் காட்டிக்கொள்ளவில்லையே' என்றும், 'தருமனது மாண்பு ஆராய்ச்சியினால் மாத்திரம் சபா பருவத்திலும் உத்தியோக பருவத்திலும் ஒரு சிறிது காணக் கிடக்கிறது' என்றும் கூறுகின்றார். ஆயின், நிவாதகவசர் வதைதான் இப்பாரதத்தில் முக்கியமாகக் கண்டெடுத்த உண்மை போலும்! அவ்வாறு வதைத்த விசயனது ஒளிதான் தருமனது ஒளியை மறைக்கும் பெருமை வாய்ந்தது போலும்! உண்மையே கூறப்புகின், நிவாதகவசரது வதையேயில்லாமல் இப் பாரதக்கதை யமையாதோ என்று கேட்கலாமல்லவா? மற்று, இப்பாரதத்தின் முக்கியமான இன்றியமையாத உறுப்புக்களாவன, இந்தப் பாரதக்கொடுமை நேர்ந்த சூதுபோர்ச் சருக்கமும், இதில் நடந்த மாபெரும் போருக்கு வழி யேற்பட்டதும் பாதிப்போர் நடந்ததுமாகிய கிருட்டினன் தூதுச் சருக்கமுமே. † இவ்விரண்டு சருக்கங்களில் விசயன் இருந்ததே தெரியாமலிருப்பதும் தருமனே தனது அறம் பொலிய நிற்பதும்,அச் சூதுபோர்நாட்கடைசியில் மற்றோருடைய புகழ்களெல்லாம் ஒளி பெறாது மங்க,

> நாட்டிடை யெல்லை பொற்றாள்
> நறுமலர் சிவக்க வேகிக்
> காட்டிடை யுற்ற போதும்
> கவலையற் றுவகை கூர்ந்தான்
> கூட்டிடை யின்ப துன்பக்
> கொழும்பயன் துய்த்து மாறி
> வீட்டிடை யுற்ற போது
> மெய்ம்மகிழ் விபுதர் போல்வான்

என்று தருமனது மாண்பினை நினைத்துக்கொண்டே கவிஞர் சருக்கத்தை முடிப்பதும், அக்கொடுமை நிகழ்ந்தபோது வீமனேனும் வெந்தழல்வாய்ப் பட்டது போலச் சினத்தினால் கதறிக் கொடியதோர் சபதம் மேற்கொள்ள, கிரீடியோ வேறொன்றும் புகலாமல், "பகலவன் தன் மதலையுயிர் பகைப்புலத்துக்கவர்வே" னென ஒருசிறு வீரவாசகமே பயின்றதும், இவனுக்கும் இப்போர்க்குக்காரணமாயிருந்த மாபெருங்கொடுமைக்கும் யாதொருதொடர்பும்இன்மையைத்தெரிவிப்பதோடு தருமனது அற மாண்பின் ஒளியையும் விளக்குவதாகும். இவ்வாறே இனிப் போர் இன்றியமையாததெனநிச்சயிக்கப்பட்டகிருட்டினன் தூதுச் சருக்கத்திலும் விசயன் முன்னின்றானல்லன்; தருமனே சமரசத்திற்கும் தருமத்திற்கும் ஏற்றதோர் வழி கற்பித்து, அது முற்றுப் பெறுதொழியின் போருக்கும் வழிசெய்து இப்பாரதத்தின் தலைவனாகவிளங்குகின்றான். வீணாகப் பல கூறுவதினும், இப்பாரத மாளிகை தருமனது அறச் செயல்களாகிய தூண்களால்நிருமிக்கப்பட்டிருக்கிறதென்று கூறுவது மிகையாகாது. மற்றைப்படி விசயனது போர்ப்பிரதாபங்களைப் பற்றிய வருணனைகளெல்லாம், பெரும்பகுதிகளுக்கிடையில் சிறுவருக்கும் மற்றவருக்கும் இடையிடையே சுவையூட்டும் கருத்தினால் அமைக்கப்பட்டிருப்பதுகொண்டு,இந் நூலின் முதற்பொருளை மறந்ததன் சாயையை முதற்பொருளென்று மயங்குவது நன்றன்று.

கண்ணனைத்தலைவனென்று திருமுதலியாரவர்கள் கூறியதில் விசயனைப்பற்றிஅவர்கூறியதினும்பொருத்தம் மிகக் காணக்கிடக்கின்றது. ஆயினும், அவர் கூறியதற்குமறுமொழியாக நான் முன் கூறியிருப்தனினும் மிகுதியாக ஒன்றும் இப்போது கூறுதற்கில்லை. அப்பொழுது நான் எழுதியதையும் மாற்றி எழுத வேண்டியதில்லை என்றும் துணிபுடையேன். ஆயினும் ஒன்றிங்கு இயம்புதல் வேண்டும். கண்ணன் தன்னேரில்லாத் தனித்தலைவன் என்பதும் தருமனை அவனுடன் ஒப்பிட வியலாதென்பதும், மறுக்கற்பாலன வல்ல. ஆயினும் அதற்காகக் கண்ணனைக் கதாநாயகனென்னக் கூறவேண்டுவதில்லை. தமிழ்க் காப்பியங்கட்குத் தலைவன் ஒப்புயர்வற்றவனாகஇருத்தல்வேண்டுமென்னும் அவ்விதி கொண்டே ஒன்றும் சொல்லுவதற்கு மில்லை. ஏனெனி னவ்விதி மாறனலங்காரத்திலுள்ள பாவிக அணியின் விருத்தியில் காப்பியப் பண்பினைப் பற்றிக் கூறும்பட்த்து, 'ஒத்தாரு மிக்காருமில்லாத தலைவனைக்கொண்டு......'என்னும் ஒருவாக்கியத்தைக் கொண்டுமொழிவதாம். ஆனால் அவ்விதிக்குச் சிறந்த பல விலக்குக்களும் உள. மாறனலங்கார முடையவரே அத்தகைய காப்பியப் பண்பிற்கு உதாரணமாகத் தலைவனில்லாததும் தலைவன் இருக்க இயலாததுமான திருக்குறளையே மேற்கோள் காட்டுவர். மற்று, தமிழில் தன்னிகரில்லாத இளங்கோவடிகளின் அவ்வரும்பெருங்காவியத்தின் தலைவனான கோவலன் தன்னேரில்லாத் தலைவனா? மணிமேகலைக்குத் தலைவனே இல்லையே. மற்றும் வடமொழியில் சூத்திரகர் எழுதியுள்ள மிருச்சகடி நாடகத்தில் சாருதத்தனைக் கதாநாயனாகக்கூறாது, அவனைத் தூக்குமேடையினின்றும் காத்த வீரனாகிய ஆரியகனையா நாம் கதாநாயகனென்பது? ஆதலின் கண்ணபிரான் தருமனது இலக்ஷியங்கள் கைகூடுவதற்கு உதவினன் என்பது ஒன்றையே கொண்டு அவரை இக்கதையின் நாயகனாகக்கொள்ள வேண்டுவதில்லை. முக்கியமாக, பாரதக்கதை, கண்ணபிரான் முதலோருடைய புவி நீக்கத்தைப் பற்றிக் கூறியதோடு நிற்காமல் தருமன் வானேறும் வரையில் தொடர்ந்துசொல்லுவதால்,தருமனது தலைமையைப் பற்றி நான் பின்னும் அதிகமாக ஒன்றும் கூறுவதற்கில்லை.

† கிருட்டினன் தூதுச் சருக்கத்தில்,விதுரனை வில்லொடிக்க வைத்ததும் கன்னனைப் பலமிழக்க வைத்ததும், அசுவத்தாமனைப் பேதித்ததுமே, பாதிப்போர் நடந்தவாறாகும்.

---



# ஒத்தெல்லோ

## ["Shakespeare's —"Othello"]

அங்கம் 2. களம் 1.

[218-வது பக்கத் தொடர்ச்சி]

இயாகோ:— வாருங்கள், வாருங்கள்[1]: மனையின் வாயிலிற்கு வெளியிலே நீங்கள் சித்திரப் படங்கள், கூடத்தில் ஒய்யாரிகள், சமையற் கட்டிற் காட்டுப் பூனைகள், உங்கள் தீமைகளில் உத்தமிகள், வெகுண்டக்கால் பேய்கள், வீட்டுக்காரியத்தில் விளையாட்டுக்காரிகள், மற்றுப் பள்ளியிடத்திலோ வீட்டுக்காரிகள். [2]

டேஸ்டிமோனா:—ஏ, சீ போ நீ, தூஷணைக்காரா!

இயா:— ஏன், அது உண்மையே, இல்லையேல் நானொரு துருக்கன்.

எமிலியா:— என்னுடைய புகழை நீ யெழுத வேண்டா.

இயா:— இல்லை, என்னை எழுதவிடாதே. [3]

டேஸ்:—என்னை நீ புகழவேண்டுமாயின், என்னைப் பற்றி என்ன எழுதுவாய்?

இயா:— ஆ, அமைதிமிக்க பெருமாட்டி, என்னை அதன்கண் ஏவாதே [4]; ஏனெனில், நுணுகிப் பார்ப்பவ னல்லனாயின் நான் ஒன்றுமே அல்லன் [5].

டேஸ்:— வா; முயன்று பார்— துறைமுகத்திற் கொருவர் போயிருக்கிறார்? [6]

இயா:— ஆம், அம்மா.

டேஸ்:—நான் மனமகிழ்ந் திருக்கவில்லை; ஆயினும் நான் இருக்குமதனை, அதற்கு மாறாகத் தோன்றியே வஞ்சித்து விடுகின்றேன் [7]. வா என்னை நீ எப்படிப் புகழ்வாய்?

இயா:—அதற்குத்தான் சூழ்ந்துகொண்டிருக்கின்றேன்[8].கம்பளியிலிருந்து குருவிப்பிசின் வருவதுபோலென் கற்பனை எனது மண்டையிலிருந்து வருகிறது. மூளையையும் எல்லாவற்றையுல் பிய்த்துப் பறித்துவிடுகின்றது [9]: மற்று, என் கவிதைத் தெய்வமோ மெய் வருந்துகின்றது; ஆம், பெறுவதும் இங்ஙனம்[10].

பெரிய 'வாயாடி' என்றும் "வசவி" என்றும் இயாகோ கூறியதைமறுத்து எமிலியாஉரைத்ததன்மேல் இயாகோ இது செப்புகின்றான்.

(1) ஒருவர்கூறியதை மறுத்து வேறொன்றுஉரைக்கப் புகுபவர், வா வா அல்லது போ போ என்று இயம்பித் துவக்கும் வழக்கப்படி வந்த சொற்கள் இவை.

(2) நீங்கள் என்பது, பொதுவாக மாதர்களைக்குறித்து நிற்கின்றது. மாதர் ஒருதன்மைய ரல்லரென்றும் வேறு வேறு இடங்களில் வேறு வேறு வகையாக நடிப்பவர்களென்றும் பழிக்கின்றான்.

மனைவாயிலிற்குவெளியேசித்திரப்படங்கள் = வீட்டை விட்டு வெளியே போவீர்களானால், சித்திரப் படங்களே போல் உங்களைப் பலவித வர்ணங்களால் அலங்கரித்துக் கொள்வீர்.

கூடத்தில் ஒய்யாரிகள் = உங்கள் கூடத்தில் உட்கார்ந்துகொண்டு, உங்களைச் சந்திக்க வருகின்ற அன்னியர்களோடு, உங்கள் அழகைக் காட்டிக் காட்டி, ஒய்யாரமாகப் பேசி மகிழ்விப்பீர்.

சமையற்கட்டில் காட்டுப்பூனைகள் = சமையற் கட்டிற்குச் செல்வீர்களானால் காட்டுப்பூனை போல் அங்குள்ள வேலைக்காரர்களைச் சீறிச்சீறி வைவீர்.

உங்கள் தீமைகளில் உத்தமிகள் = மற்றவர்க்குத் தீமை செய்ய எண்ணினீர்களானால், மிக்க உத்தமிகள் போலப் பாவனை செய்து அவர் குடிகளைக் கெடுத்துவிடுவீர்-(அல்லது) யாராவது உங்களுக்கு ஓர் தீமை செய்துவிட்டால், "நிரபராதியான இவர்களுக்கு என் இந்தத் தீமைசெய்தார்" என்று எல்லாரும் பரியும்படி பாவனைபுரிவீர்.

வெகுண்டக்கால் பேய்கள் = உங்களுக்கு யாராவது கோபம் மூட்டிவிட்டால், பேய்களென அவர்களைத் தொடர்ந்து பழிதீர்த்துக்கொள்ளாமல் விடமாட்டீர். வீட்டுக் காரியத்தில் விளையாட்டுக்காரிகள் = வீட்டுக்காரியங்களைக் கவனிக்கவேண்டிய வேளையில் அதனைக் கவனிக்காமல் விளையாட்டுப் புத்தியாக இருந்துவிடுவீர்.

பள்ளியிடத்திலோ வீட்டுக்காரிகள் = கணவனுடன் கட்டிலில் அமர்ந்திருக்கும்போதுதான், விளையாட்டிற்கிடங் கொடாமல் வீட்டின் விசாரமே அதிகம் உடையவர்களாக நடிக்கத் தலைப்படுவீர்.

(3) உன்னுடைய புகழை நான் எழுதாமல்இருப்பதே உனக்கு நல்லது—என்பது பொருள்.

(4) உன்புகழைப்பற்றிப் பேசும்படி என்னைத் தூண்டாதிருத்தலே நலம் - என்பது பொருள்.

(5) நுணுகிப்பார்த்துக் குற்றம்கண்டுபிடிப்பதில்தான் நான் வல்லவன்—என்பது பொருள்.

(6) ஒருவர் போயிருக்கின்றாரா? என்னுங் கேள்விக் குறிப்புடைய வாசகம் இது. இயாகோவினுடன் இப்படிப் பேசிக்கொண்டிருந்தாலும், இவள் மனம் ஒத்தெல்லோவின் வருகையில் கவலையுடையதா யிருக்கின்றது என்பதை இக்கேள்வி தெரிவிக்கின்றது.

(7) நான் கவலையுடையவளாக இருப்பினும், மகிழ்ச்சியுள்ளவள்போல் வெளிக்குக் காட்டிக்கொள்கின்றேன்—என்பது பொருள்.

அதனை வஞ்சிப்பதாவது—மனத்திலுள்ள கவலையின் தோற்றம் தன் முகத்திலும் பேச்சிலும் தென்படாதபடி மறைத்துவிடுதல்.

(8) எவ்வாறு புகழ்வது என்பதுபற்றித்தான் யோசித்துக்கொண்டிருக்கின்றேன்—என்பது பொருள்.

(9) என் மனத்தில் கற்பனைசெய்த கருத்தை வெளிப்படுத்தக் கஷ்டப்படுகின்றேன். இந்த முயற்சியில் என்

அவள் நிறத்தழகியாகவும் அறிவாளியாகவும் இருப்பாளாயின்—அழகும், புத்தியும், ஒன்று உபயோகத்திற்காக இருக்கின்றது, மற்றது அதனை உபயோகப்படுத்திக்கொள்ளும்.[11]

டேஸ்:—நன்கு புகழ்ந்தனை[12]! கருப்பாகவும் புத்தியுடையவளாகவும் இருப்பாளாயின், எப்படி ?

இயா:— கருப்பாயிருந்து அதனோடு புத்தியும் உடையவளாயின், தன் கருமையுடன் பொருந்தவல்லவொரு வெள்ளையைத் தேடிக்கொள்வாள்[13].

டேஸ்:—பின்னுங் கேடு, பின்னுங் கேடு!

எமிலியா:—அழகாகவும் இழுதையாகவும் இருந்தால், எப்படி ?

இயா:—அழகுடைய ஒருத்தியும் இதுகாறும் இழுதையாக இருந்ததில்லை[14].

டேஸ்:—கள்ளுக்கடையில் மடையர்களைச் சிரிப்புமூட்டுதற் கொத்த பழைய அசட்டு ஆபாச உலகமலைவுகளாம் இவை[15]. பழுதும் இழுதையுமா யிருப்பவளுக்கு, இழிந்த புகழ் நீ யாது வைத்திருக்கின்றாயோ ?[16]

இயா:–அழகும் அறிவு முடையதுகள் செய்கின்ற பழுதுடைச் சேஷ்டைகளைச் செய்யமாட்டாத அவ்வளவு பழுதும் இழுதையு மானவர் ஒருவருமில்லை[17].

டேஸ்;—அட, அதிபார அஞ்ஞானமே!–கடைகெட்டதை எல்லாவற்றிற்கும் மேலாகப் புகழ்கின்றாய் நீ[18]. மற்று, உண்மையே தகுதிவாய்ந்த மாதருக்கு நீ எப்புகழ் அளிக்கவல்லை? தன் யோக்கியதையின் அதிகாரத்தினால், அந்தத் துவேஷத்தின் அறுமதியையே நியாயமாக அணிந்திருப்பவளை ?[19]

இயா:—எப்பொழுதேனும் அழகாயிருந்து ஒருபொழுதும் அகந்தை யில்லாம லிருந்தவள்[20]; இச்சைப்படி நாக்கு இருந்தும் ஒருபோதும் இரையாதவள்[21]; பொன்னிற் கொருபோதும் குறைவுறுதிருந்தும் ஒருபோதும் ஆடம்பரமாகப்போகாதவள்[22]; தன் இச்சையினின்று ஓடி, ஆயினும் 'இப்பொழுது நான் ஆகலாம்' என்பவள்[23]; கோப மூட்டப்பெற்று, தன்பழியும் அருகிருக்க, தானுற்றதீங்கு தாழவும் கோபம் பறக்கவும் கட்டளையிடுபவள்[24]; ஸால்மன் வாலிற்காகக் காட்டின் தலையை மாறுவண்ணம் மதியின் நொய்மை இல்லாதிருந்தவள்[25]; நினைக்கவல்லவளாயிருந்தும் தன் மனத்தை ஒருபொழுதும் தெரிவிக்காதவள்; வயவர் தன்னைப் பின்தொடர்வது கண்டும் திரும்பிப் பார்க்காதவள்; இத்தகை

மூளையெல்லாம் பியந்துவிடும்போல் இருக்கின்றது—என்பது பொருள்.

குருவிப்பிசின்—கொம்பின் நுனியில் தடவிக் குருவிகளைப் பிடிப்பதற்கு உபயோகப்படுவது. இந்தப் பிசின் கம்பளியில் ஒட்டிக்கொள்ளுமானால், அதை நீக்கும் பொழுது கம்பளியும் பியந்துபோவதுபோல், என் கருத்துக்களை மண்டையிலிருந்து எடுக்குங்கால் என் மூளையெல்லாம் சிதைந்துவிடுகிறது—என்பது பொருள்.

(10) கவிதைத் தெய்வம் = கற்பனா சக்தி. என் கற்பனா சக்தியானது கருத்துட் கொண்டதை வெளிப்படுத்தப் பிரசவவேதனைப் படுகின்றது. பட்டு, அது பெற்றதைச் சொல்கிறேன் கேள்—என்பது பொருள்.

(11) ஒருத்தி, அழகு புத்தி இரண்டும் உடையவளாயின், தன் அழகு பயன்படும்படி தன் புத்தியைக்கொண்டு ஆடவர்களை வசியம்செய்துகொள்வாள், என்றேனும், அல்லது, ஒருத்தி அழகாயிருப்பாளாயின், புத்தியுடையவன் அவளைத் தனக்கு வயமாக்கி அவ்வழகை உபயோகப்படுத்திக்கொள்வாள், என்றேனும் பொருள்படலாம்.

(12) இதுவா புகழ்ச்சி!—என்று பரிகசிக்கின்றாள்.

(13) கருப்பாயிருப்பவளும் தன்புத்தியின் சூழ்ச்சியால் அழகிய ஆடவர்களை வசியப்படுத்திக்கொள்ளலாம்— என்பது பொருள். வெள்ளை, என்பது அழகிய நிறத்தைக் குறிக்கின்றது. அன்றியும் 'அசட்டுத்தனம்' என்னும் பொருளிலும் அச்சொல் வழங்குவது உண்டு. கருப்பாயிருப்பவளும்; தன்னை ஆசைப்படத்தக்க ஒரு அசடனை, தன் மதிச் சூழ்ச்சியால் கண்டுபிடித்துக்கொள்ளலாம்—என்ற பொருளும் ஏற்கும்.

(14) இழுதை = அறிவில்லாதவள். அறிவில்லாமற் போனாலும் ஒருத்திக்கு அழகிருக்குமானால், ஆடவர்கள் அவளை அறிவுள்ளவள்போலவே பாராட்டுகின்றார்கள், என்றேனும், அல்லது, அழகைக் கொண்டே ஒருத்தி ஆடவர்களை வசியம்செய்துவிடலா மாகையால், அறிவில்லாதது அவளுக்கு ஒரு குறையன்று, என்றேனும் பொருள்படலாம்.

(15) ஆபாசம் = மேல்பார்வைக்கு நியாயமானதுபோலவும் ஆழ்ந்து நோக்கினால் பொருளற்றதாயும் முடிவது; உலகமலைவு - ஒன்றோடொன்று பொருந்தாததும், அசாத்தியமானதும் ஆகி அசட்டுத்தனமாயும் அமைவது. இவையிரண்டும் தருக்கசாத்திர வழக்குடைய சொற்கள்.

(16) பழுது - அழகின்றி அருவருக்கக்கூடியவளாக இருத்தல்.

(17) அழகுடைய புத்திசாலிகள் செய்கிற சேஷ்டைகளைச் செய்யமாட்டாத அசடும் விகாரமும் உடையவர்கள் ஒருவருமில்லை—எல்லாருந்தான் சேஷ்டைகள் செய்கிறார்கள்; இவ்விருவகையினர்க்கும் வேற்றுமையில்லையே; என்று இயகோ, தனக்குரிய மனுஷத்வேஷத்தைக் காட்டுகிறான். உடையதுகள், என்பது இகழ்ச்சிக்குறிப் புடையது.

(18) அழகில்லா இழுதைகளை அறிவுடைய அழகிகளுக்குச் சமானமாக இயாகோ கூறிவிட்டானாதலால், அவன் அஞ்ஞானத்தை டெஸ்டிமோனா இங்ஙனம் பரிகசிக்கின்றாள்.

(19) அணிந்திருப்பவளை.........எங்ஙனம் புகழுவாய்? என்று சேர்த்து முடித்துக்கொள்க. தன்னைத் துவேஷித்துப் பகைக்கின்றவர்களாற் கூடப் பாராட்டப்படும்படி உத்தமகுணங்கள் வாய்ந்த ஒருத்தியை நீ எங்ஙனம் புகழுவாய்—என்றுகேட்கின்றாள். அத்தகையவள் ஒருத்தியுமே இவ்வுலகில் இல்லையென்று இயாகோ பதில் உரைக்கின்றான்.

(20) அழகிருப்பவள் இறுமாப்பில்லாதவளாயிருத்தல் அரிது. இளமையில் இருந்த அழகைக்கொண்டே அது கழிந்த முதுமையிலும் அகந்தை காட்டுகின்றாள்.

(21) வாயைத் தடுப்பார் இல்லாதபோது இரைந்து பேசாதவள்.

(22) பணமிருந்தும்ஆடம்பரம்செய்துகொள்ளாதவள்.

(23) ஆசைகளை அடக்கவேண்டிய வேளையில் அடக்கி அனுபவிக்கக்கூடியவேளையில் அனுபவிக்கின்ற மிதபுத்தியுடையவள்.

(24) தன்னைக் கேபமூட்டியவர்கள்மீது பழிதீர்த்துக்கொள்ளக்கூடியவளாகியும் அது செய்யாமல் பொறுத்திருப்பவள். தீங்கு தாழ்தல் - தீங்குசெய்தவர்மேல்பழிதீர்த்துக்கொள்ளாமல் காலந்தாழ்த்திருத்தல்.



யவர் எப்பொழுதேனும் இருந்திருப்பாராயின், அவளொருத்தி...[26].

டேஸ்டி:—யாது செய்ய ?

இயா:—மடையர்களுக்கு முலையூட்டிச் சிறுபீரின் சரித்திர மெழுதிவைக்க.[27]

டேஸ்டி:—ஆகா, மிக மிக முடம்பட்ட மலட்டு முடிவே[28]!–நின் கணவனேயாயினும், எமிலியா, இவனின்று நீ ஒன்றுங் கற்கவேண்டா[29].—காஸ்ஸியோ, நீ யென்ன சொல்கின்றாய்? மிக்க தூஷணையோடு தாராளமுமான மந்திரியல்லனோ இவன்?[30].

காஸ்ஸி:—அம்மா, இவன் உறஉறப் பேசுகிறான்; பண்டிதனிலும் நீ யிவனைப் படையாளனில் அதிகம் நயக்கலாம்[31].

இயா:—(ஒருபுறமாய்) அவளை உள்ளங்கைபற்றி எடுக்கின்றான்: ஆம், இரகசியமே, நன்கு பேசினாய்! இதனைப்போன்ற இத்துணைச் சிறிய வொரு சிலந்திவலைகொண்டு காஸ்ஸியோ அனைய அத்துணைப் பெரிய ஈயினை அகப்படுத்துவேன். ஆம்,ஆம், அவள்மீது உன் சிரிப்பைப் பரப்பு; உன்னுடைய வினயத்திலேயே நானுனக்கு விலங்கிடுவேன். உண்மையே உரைக்கின்றாய்; அப்படியே அது, வாஸ்தவம்: இவைபோன்ற மாயவித்தைகள் உன்னை உன் அடுத்த அதிகாரப் பதவியிலிருந்து உரித்துவிடுமானால், இத்துணைமுறை நீயுன் மூன்றுவிரல்களுக்கு முத்தங்கொடாதிருந்தாயாயின் நலமாயிருந்திருக்கும்; இதுவே கொண்டு நீ மீண்டும் உன் விழைவினாட்டத்தை நடத்தமுனைகின்றாய். மிகநன்று; நன்கு முத்தமிட்டனை, உசிதமான வினயம்! அது, அப்படித்தான், உண்மையே. மீண்டுமா, நின் உதட்டினிற்கு உன்விரல்கள்? அவைதாம், நின்பொருட்டு மருந்துக்குழாய்களா யிருந்தா லாகாதா![32].

[எக்காள ஒலி கேட்கின்றது.]

மூரர்! அவரது எக்காளத்தை அறிவேன்.

காஸ்:— உண்மையே, அப்படித்தான்.

டேஸ்:— நாம் அவரைச் சந்தித்து வரவேற்போம்.

காஸ்:—பாருங்கள், இதோ வருகின்றார்.

(25) ஸால்மன், காட், என்பன மீன் வகைகள்; ஸால்மன் சாதாரண உணவாகவும், காட் மிக்க சுவையுடைய சிறப்பானதாகவும் ஷேக்ஸ்ப்பியர் காலத்தில் கருதப்பட்டன. சிறந்த காட்டென்னும மீனின் தலையிருக்க அதனைக்கொடுத்து அதற்குப்பதிலாக ஸால்மன்மீனின்வாலை வாங்கிக்கொள்வாளானால் அவள் மதியை என்னவென்பது. இவ்வளவு மதியீனமான காரியத்தைச் செய்யாத மாதொருத்தியும் இல்லை—என்பது கருத்து.

(26) வயவர் -காதல்வேண்டுவோர். இப்படிப்பட்டவள் ஒருத்தியிருப்பாளாயின்.........என்னும் வாக்கியத்தை இயாகோ முடிப்பதன்முன், 'இருந்தால் அவள் என்ன செய்வாள்' என்று டெஸ்டிமோனா கேட்கின்றாள்.

(27) இருந்தால் என்ன சாதித்துவிடப்போகின்றாள்! ஒன்றும் இல்லை. பிள்ளைகளைப்பெற்று வளர்த்தும் வீட்டுச் சிக்கனத்தைக் கவனித்துக்கொண்டும் கிடக்கப்போகின்றாள், அவ்வளவுதான்—என்று இயாகோ அவன் கயமைக்கிணங்க, உத்தமகுணமுடையவர்களை ஒன்றிற்கும் உதவாதவர்களென்றும், பிள்ளைகள் பெற்று வீட்டுக்காரியங்களைக் கவனித்திருப்பவர் தம்வாழ்நாளை வீணாக்கிக்கொள்பவர்என்றும் இகழ்கின்றான். இப்படிப்பட்டவள் வயிற்றில் பிறக்கும் பிள்ளைகளும் மடையர்களாயிருக்குமாம். சிறு பீரின் சரித்திரமெழுதி வைக்க = பீர், என்பது ஒரு வகைசசாராயம். அதன் சரித்திரம் எழுதிவைப்பதாவது எவ்வளவு பீர் வாங்கினாரென்று வீட்டுக்கணக்கில் எழுதிவைத்தல்—வீட்டுச் செலவுச் சிக்கனத்தைக் கணக்குப்படி நடத்துபவள், என்பதைக் குறித்து நிற்கின்றது இது.

எழுதிவைக்க.........பயன்படுவாள் என்று சேர்த்து முடித்துக்கொள்க.

(28) அத்துணைச் சிறப்பாக உத்தமமாதர் இலக்ஷணங்களைக்கூறிவந்து பின் இத்துணைப்பயனற்ற அற்பமாகவா முடிப்பது—என்பது பொருள்.

(29) ஏதோ பெரிய விஷயம் வரப்போகின்றதென்று எதிர்பார்த்திருந்த டெஸ்டிமோனா, இம்முடிவினைக்கேட்டுச் சிறிதுநேரம் மலைத்துநின்று பிறகு, "உன் புருஷ புத்தியைக்கேட்காதே" என்று எமிலியாவைநோக்கிவிளையாட்டாகச் சொல்கிறாள்.

(30) வரம்பில்லாமல் தூஷிக்கின்ற புத்திமதிகளைச் சொல்கின்றானல்லனோ—என்பது பொருள்.

(81) உற உறப் பேசுதல் - நயங்கருதி ஒன்றையும் மறைக்காமல் எல்லாவற்றையும் வெளிப்படையாகப்பேசிவிடுதல். சொல்வன தேர்ந்து சொல்லப் பாண்டித்தியம் அதிகம் வேண்டும். இவன் படையாளனே யொழியப் பண்டிதனல்லன். படையாளர் எதனையும் உள்ளது உள்ள படியே வெளிப்படையாகப் பேசிவிடுவார்; இவனது பாண்டித்யத்திலும் படைத்திறமே உன்னால் அதிகமாக விரும்பக்கூடியதாக இருக்கும்—என்பது பொருள்.

(32) டெஸ்டிமோனாவிடம் விடைப்பெற்றுக்கொள்பவனாகிய, காஸ்ஸியோ, அவளுக்கு வினயங்கள் செலுத்தி மெதுவாகச் சில மொழிகள் கூற, அப்பொழுது, இயாகோ ஒருபுறமாய் நின்று, இதனைக்கொண்டே அவனைத் தான் கெடுத்துவிடலாமென்று கூறுகின்றன இவை.

உண்மையே உரைக்கின்றாய், என்றது, முன் காஸ்ஸியோ, தன் படையாண்மையைப் பாராட்டியதைக் குறிக்கின்றது போலும்.

மாதரை வியந்து வினயங்கள் செய்பவர், தம் மூன்று விரல்களை வாயோடு வைத்து முத்தமிடுவது அக்காலத்திய வழக்கம்.

விழைவின் ஆட்டம் - அன்புடன் வினயத்தைத் தெரிவிக்கும் விதம்.

இதுபோன்ற மாயவித்தைகள்......நலமாயிருந்திருக்கும்—நீ செய்கிற வித்தைகளைக்கொண்டே உன்னுடைய பதவியை இழப்பிக்காமல்நான் விட்டால், அப்பொழுது தான் இப்படிச்செய்தது உனக்கு நன்மையாகும். நானும விடமாட்டேன், உனக்குத் தீதாகப் போகின்றது பார்—என்பது பொருள்.

மருந்துக்குழாய்களா யிருந்தாலாகாதா = நீ உறிஞ்சும் இவ்விரல்கள் உனக்கு விஷமாகப்போகின்றனவே யொழிய மருந்தாகப் போவதில்லை—என்பது பொருள்.

199213

# நம்மாழ்வார் வைபவம்

## திருவாய்மொழி

7-ம் பத்து, 5-ம் தசகம்

[216-வது பக்கத் தொடர்ச்சி]

8-ம் பாசுரம்

*செல்லவுணர்ந்தவர்செல்வன்றன்சீரன்றிக்கற்பரோ*
*எல்லையிலாதபெருந்தவத்தாற்பலசெய்மிறை*
*அல்லலமரரைச்செய்யுமிரணியனாகத்தை*
*மல்லலரியுருவாய்ச்செய்தமாயமறிந்துமே.*

பதக் குறிப்புக்கள்:–செல்ல உணர்ந்தவர்கள்-எவ்வளவுவரையில் மனிதரின் விசாரணை எட்டுமோ அவ்வளவுக்குப் பரமாரிசித்து அறிந்தவர்கள், மிறை-மிடுக்கு- பிறர்க்குச் செய்யும் இடக்கான அநர்த்தங்கள், அல்லல் - தீங்கு, மல்லல் - பெருமைபட்ட, அரியுருவாய்-சிங்கவேடம்பூண்ட மானிடரூபமாய், மாயம்-நடையாடும் மானிடதேவ முதலிய எல்லா உருக்களாலுந் தனக்குச் சாவில்லை என்று தேவதைகளைக் குறித்துத் தவமியற்றிச் சாதிக்கப்பெற்ற வரத்தைவிலக்க இதுவரைபார்க்கப்படாதஉருவமாய் நரசிம்மாவதாரமெடுத்தது ஒரு புதுமை(மாயம்)என்று திருவுள்ளம். தன் மகனை ஹிரணியன் நிந்திக்க எண்ணமிட்டு, ஹரி இத் தூணிலிருக்கிறானென்று கேட்க "ஆம் இருக்கின்றான்" என்று சொன்னவார்த்தை பொய்க்காமல் அத்தூணிலிருந்தே தோன்றியதும் ஒரு மாயம்-கைமாம் கதை கத்தி இவைகளால்லாமல் நகத்தால் அசுரன் உடல் கிழிபட்டு இறந்ததுமற்றுமோர் "மாயம்"; ஆகவே மாயங்கள் என்றார்.

பொழிப்புரை:—தன்னுடைய தபசுகளின் பலத்தினாலே தேவதைகளுக்கு எல்லாப் பிரகாரத்தாலும் தீங்குவிளைப்பவனான ஹிரணியனுடைய சரீரத்தைக் கம்பீரமான சிங்கஉருவாய் பிளந்தருளின ஆச்சரியத்தை அறிந்துவைத்தும் அறிவுடையவராயிருப்பவர் எல்லாக்கல்யியானகுணங்களும் நிறைந்துள்ள பகவத்ஸ்வரூப வாத்ஸலியகுணத்தையல்லது வேறுமொன்றைக் கற்பாரோ?

---

9-ம் பாசுரம்

*மாய மறிபவர் மாயவற் காளன்றி யாவரோ*
*தாயஞ்செறுமொருநூற்றுவர்மங்கவோரைவர்க்காத்*
*தேச மறியவோர் சாரதியாய்ச்சென்று சேனையை*
*நாசஞ் செய்திட்டு நடந்த நல்வார்த்தை யறிந்துமே.*

பதக் குறிப்புக்கள்:–தாயம்செறும்-பாண்டவர்க்கு உரித்தானபங்குபாகத்தைக்கொடுக்கமாட்டோமென வாதுசெய்து தடுத்த; நாசம் செய்திட்டு நடந்த - பாரதப்போரில்சேனைகளெல்லாம் மடிந்தபின்னர், துஷ்டநிக்கிரஹமும் சிஷ்டபரிபாலனமும் செய்யத் தாமெடுத்த கிருஷ்ணாவதாரக் கருத்தை நிறைவேற்றிய பிறகு திருநாட்டுக்குத் தாம் எழுந்தருளின, நல்ல வார்த்தையும் - திவ்வியசரித்திரம் - அதாவது மஹாபாரதம் கூறுகிறபடி அத்திவ்விய சரித்திரத்தின்முடிவை யறிந்தவர்.

பொழிப்புரை:—பாண்டவர்களுக்கு ஸர்வலோக சாக்ஷியாக ஸ்ரீரத்தியம் பண்ணி அவர்களுக்கு உரித்தானராஜ்யத்தைக் கொடோமென்றுமறுத்துப்போர் செய்த விரோதிகளான துரியோதனாதிகளையும் அவர்களின் ஸைந்நியங்களையும் நாசம் செய்திட்டுத் திருநாடேற வெழுந்தருளின கல்யியாண குணத்தையறிந்துவைத்தும் நல்லதைப் பகுத்தறிந்தவர் அந்த ஆச்சரிய மகிமையுடையவனுக்கன்றி யாளாவாரோ?

---

10-ம் பாசுரம்

*வார்த்தை யறிபவர்*
*மாயவர்க் காளன்றி யாவரோ*
*போர்த்தப் பிறப்பொடு*
*நோயொடு மூப்பொ டிறப்பவை*
*பேர்த்துப் பெருந்துன்பம்*
*வேரற நீக்கித்தன் றாளின்கீழ்ச்*
*சேர்த்தியவன் செய்யுஞ்*
*சேமத்தை யெண்ணித் தெளிவுற்றே.*

உரை:–போர்த்தப்பிறப்பொடு-அவனவன் ஆத்மசுவரூபம் பகவானின் சொத்தென்றும், அவனுடைய பிரயோஜனத்துக்காகவே காரியங்கள் செய்யப்படுதல் வேண்டுமென்றும் இருக்கிற தத்துவங்களை மானிடஜன்மமெடுத்தபிறப்பே போர்வைபோட்டுமறைப்பதுபோல் மறைத்துவிடுகிறதால் இதைப் பின் பிறப்புக்கு வசப்படுத்தாமல் பக்தர்களைப் பகவான் காப்பாற்றித் தருகிறானென "வேர்அறநீக்கி"என்கின்றார். நோயொடு-நோய்கள், மூப்பு - வயதினால் ஜீர்ணித்துப்போதல், இறப்பு - சாதல் முதலிய கஷ்டங்களைப் பகவானின் கிருபை பேர்த்துநீக்கித்தருகிறதென்று திருவுள்ளம். "பிறப்பு" அற்றுப்போனால் மற்ற மூன்றும் தொலையுமல்லவா? "அவை" யென்றது இம் மூன்றையுமே. "பெருந்துன்பம்"என்பது பிறப்புநோய் ஜரை இறப்பென்று இதற்கு முன் சொல்லியவற்றையே குறிக்கிறதென்பதுதோன்றும். இப்படிப் பொருள்கொண்டால் புனர்உக்தி தோஷம் ஸம்பவிக்கும். இவ்வாழ்வார் கிரந்தத்தில் இவ்வாறு காவ்ய இலக்கணப் பழுது எவ்விடத்தும் காண்பதரிது. ஆகையால் இப்பதம் பக்தியோக நிஷ்டருக்கு உலகப்பற்று ஸங்கம் இவைகள் விட்டவுடன் நேரிடும் பரிசுத்தாத்ம சுவரூபம் - தத்தம் மங்களகரமான ஸ்வசுவரூபம், வழி நடுவில் ஏற்படும் ஸம்பவத்தை இலக்குவைத்துக்குறிக்கிறது. இது வெகு ரஸமாயும் இன்பமாயும் இருக்குமாகையால் இதனிலேயே மனமூன்றி மேல் தாம் தமக்குள் படுத்திக்கொண்ட பக்தியோகத்தவமுயற்சியை விட்டுவிட்டு ஏமாந்து போக ஸம்பவிக்கும், இதைத் தான் கேவல(mere)ஆத்மஸவரூபம் என்றும் கைவல்யியமென்றும் வைட்டிணவ வேதாந்திகளுரைப்பார்கள். கொஞ்சகாலமோ நீடித்தகாலமோ நடக்குமாயினும் இவ்வநுபவம் தேய்ந்து ஒழிந்துவிடுமாகையால் பக்தியோகத்துக்குத் தடையிடும்பயனே அன்றிவேறெவ்விடத்துக்கும் கொண்டுசெல்லாது. எல்லாத் தவங்களுக்கும் முக்கியமான பயனாகிய பகவானுடைய தரிசனமும் அன்பும் அவனுக்கே அடிமை செய்யும் உரிமையும் இழக்க நேரிடுமாகையால் "துன்பம்" என்றனர்-இத்துன்பம் அப்பக்தனுக்குவந்து நலிவுசெய்யாவண்ணம் இம்மஹானே 1-ம் பத்து 2-ம் தசகம் 5 வது பாசுரத்தில் "அற்றது பற்றெனில் உற்றது வீடுயிர், செற்றது மன்னுறில் அற்றிறை பற்றே"-அதாவது, ஸுகமுமின்பமும் கலநது வெகுரஸமாகத் தோன்றுகின்ற பரிசுத்தாத்ம சுவரூபம் பக்தனுக்கு உலகப்பற்றும் ஸங்கமும் நீங்கினால் தவமுயற்சியால் தோன்றும், "அது செற்று" - இதிலகப்படாதே; "மன்னுறில்" பக்தி யோகத்தில் நிலைநின்று தேர்ந்து மோக்ஷ ஸாம்பிராஜ்ஜியத்தையே யடைய வேண்டுமானால், அற்று - உலக விஷயங்களின் ஆசை விடும்பொழுதே, இறைபற்று-பகவானின் இன்னருளையே கடைபிடித்துப் பெரும்புருஷார்த்தத்தை யடைகவென்றுகற்பிக்கின்றார்.

குறிப்பு:—நாம், பரிசுத்தாத்ம சுவரூபம் - Cosmic Conciousness என்று முன்பு எழுதியிருக்கிற வியாஸத்தில் பரக்கக் காண்க. தன் தாள் சேர்த்தி - பகவான் பக்தர்களைத் தம் திருவடிகளி லடைவித்து மோக்ஷ இன்பம் அளிக்கையில் பிறப்பு மூப்பு பிணிகள் இறப்புஇவற்றைத்தவிர்த்துத்தருவதுபோலவே இத்துன்பத்தையும் நீக்கி எப்பொழுதும் நற்கதியளிக்கிறானென்று திருவுள்ளம். யோகம் - ஈட்டுதல் கூட்டுதல், "சேமம்" கிடைத்ததைப் போகவொட்டாமல் காப்பாற்றுதல். தத்காலப் பேறு- பிற்பு-அதாவது மாறிமாறி ஜென்மமெடுத்தல் இல்லாமை. இது "பகவானின் திருவடிவாரச்சேர்த்தியிருந்தால்அவன் இன்னருளால் ஸம்பவிக்காதல்லவோ? இதெல்லாம் அறிந்து தெளிந்தவர்கள்வார்த்தையறிபவர்களாயிருந்து இராமபிரானுக்காளாகாது நிற்க முடியுமோ?

11-ம் பாசுரம்.

*தெளிவுற்று வீவின்றி நின்றவர்க்*
*கின்பக்கதி செய்யும்*
*தெளிவுற்ற கண்ணனைத் தென்குருகூர்ச்*
*சடகோ பன்சொல்*
*தெளிவுற்ற வாயிரத் துளிவை பத்தும்*
*வல்லாரவர்*
*தெளிவுற்ற சிந்தையர் பாமரு*
*மூவுலகத் துள்ளே*

பதக் குறிப்புக்கள்:—வீவின்றி-இடையில் தடைப்படாமல் நன்கு தெளிவுற்று, நின்றவர்க்கு - பகவானிடத்தில் பக்தியில்லையன்றி வேறுபிரயோஜனத்தின் பொருட்டு அகலாதவர்களுக்கு, இன்பக் கதி செய்யும்-அதிரஸமான தன திருவடிமலர்களை அநுபவிக்கச்செய்யும், தெளிவுற்றகண்ணன்-இப்படிப்பட்டபக்தர்களுக்குத்தம்மால் கொடையாகக்கொடுக்கக்கூடிய பரமபுருஷார்த்தமான தன்னையே அநுபவிக்கும் ஒரு இன்பநுகர்ச்சியைக் கொடுக்கும் கண்ணன், தன் திருவுள்ளத்தில் நன்கொடைகொடுத்தோமென்ற ஞானமுமே இல்லாமல் தெளிவுற்றிருந்ததென்றுஆழ்வார் திருவுள்ளம். தெளிவுற்ற ஆயிரம் - சாக்ஷாத் கரித்துப் பாடிய ஆயிரம்.

கருத்து:—இத்திருவாய்மொழியையறிந்தவர்கள் இவ்வுலகத்திலிருந்தே பகவானை யறிந்து அவன் திறத்தேபட்டு மஹாஆநந்தத்தை அனுபவிப்பார்கள். இத்தசகத்தில் எம்பெருமான் தனக்குச் சொந்தமாயும் அவனுக்கே ஸஹஜமாயும்உள்ள சிநேகபாவத்தைத் தன்னுடைய ஸர்வ சிருஷ்டிவர்க்கங்களிடத்திலும் பாராட்டி ஸர்வஜனஸுஹிருத்தாயிருக்கிறான் என்று கற்பிக்கின்றார்.

---

# நரவாகன தத்த சரிதம்

தோற்றுவாய்

குணாட்டியர் என்ற மாபெருங் கவிஞர் பைசாச மொழியில் பிருகத்கதை என்று ஒருநூல் இயற்றினார் என்ற செய்தி உலகு அறிந்தது. இந்தக் கதையும் இராமாயணம் மஹாபாரதம் என்னும் இரு பெருங்காவியங்களோடு வைத்து எண்ணப்படும் பெருமை வாய்ந்தது. பெருங்கதை யெனப் பொருள்படும் பிருகத்கதை மிக்க விரிவானதாக இருந்தமையின் காஷ்மீரதேசத்திலே சற்று முன் பின்னாகப் பதினோராம் நூற்றாண்டில்வாழ்ந்தசோமதேவர்என்பவர் பிருகத் கதையின் வழித்தாக கதாசரித் சாகரம்என்ற நூலையும், க்ஷேமேந்திரர் என்பவர் பிருகத் கதா மஞ்சரி என்ற நூலையும் இயற்றினார்கள். இவை வத்தவ நாட்டு அரசனான உதயணன், அவனது மகனும் வித்தியாதர அரசனுமான நரவாகன தத்தன் இவர்களுடைய கதையையும் இடையில் பிற பல கதைகளையும் தொகுத்துக் கூறுவனவாயின. தமிழில் பெருங்கதை என்ற ஒரு நூலும் உதயண குமார காவியம் என்ற ஒரு நூலும் உளது. பெருங்கதை என்ற நூல் முழுதும் கிடைக்காவிடினும், கிடைத்த வரையில் மகாமகோ பாத்யாய ஐயரவர்களால் அழகுபெற அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டுளது. இவைகளையன்றி உதிதோவ்ய காவியம் என்ற பேருடைய நூலொன்று வடமொழியில் சைனமதச் சார்பாக உளது என்று மகாமகோபாத்யாய ஸ்ரீ ஐயரவர்களே எழுதியுள்ளார்கள். இவைகளெல்லாம் உதயணன் கதையைப் பெருக்கமாகவும் நரவாகன தத்தன் கதையை மிகச் சுருக்கமாகவும் உரைப்பன.

நேபாளத்திலே நேபாள மகாத்மியம் என்று ஒரு நூல் இருக்கிறது. அதனிலும் உதயணன் நரவாகன தத்தன் இவர்களுடைய கதைகள் சொல்லப்படுகின்றன. அவற்றைக் கூறுகின்ற பாகத்துக்குப் பிரகத்கதா சுலோக சங்கிரகம் என்று பெயர். இது புதஸ்வாமின் என்பவரால் இயற்றப்பட்டது. இந்த நூலில் உதயணன் கதை சுருக்கமாகவும் நரவாகன தத்தன் கதை விரிவாகவும் கூறப்பட்டிருக்கின்றது. இந்தக் கதையை நரவாகனதத்தன் தானே சொல்லியதாக ஆசிரியர் கூறுகின்றார்.

இப்பொழுது கிடைத்துள்ளது அந்த நூலின் ஒரு பகுதியேயாகும். இந்தப் பகுதியில் 4539 சுலோகங்கள் காணப்படுகின்றன. நரவாகன தத்தன் இருபத்தாறு மனைவியரை மணந்துகொண்டான். அவர்களுள் ஆறு மனைவிகளுடைய கதையே நமக்குக் கிடைத்துள்ள பாகத்திற் காணப்படுகிறது.

இந்நூல் i கதாமுகம் ii நரவாகன தத்த ஜன்மம், iii மதன மஞ்சுகலாபம், iv வேகவதிலாபம், v காந்தர்வதத்த லாபம், vi அஜினாவதீ லாபம், vii பிரியதர்சனுலாபம் viii பாகீரதியசோ லாபம் என்னும் எட்டுச் சருக்கங்களை யுடையது. கதாமுகம் மூன்று அத்தியாயங்களையும்; நரவாகன தத்த ஜன்மம் 1. பிங்களிகாக்யானம்,2. தோகதசம்பாதனம்,3 குமார ஜன்மம் என்ற மூன்று அத்யாயங்களையும் ; மதன மஞ்சுகலாபம் 1. யௌராஜ்யாபிஷேகம், 2. மிருகயா விகாரம், 3. புளிந்தார்ச்சனை, 4. ரத்யா ஸம்லாபம் 5. மதனமஞ்சுகா லாபம் என்ற ஐந்து அத்தியாயங்களையும் ; வேகவதீலாபம் 1. வேகவதீலாபம், உத்யான விஜயம், 2. வேகவதீதர்சனம், 3. ஷை, 4. ஷை 5. வேகவதீலாபம் என்ற ஐந்து அத்தியாயங்களையும் ; கந்தர்வதத்தாலாபம் 1. சம்பா பிரவேசம், 2. கந்தர்வதத்தை விவாகம், 3. சானுதாசர்கதை, 4. பின் தொடர்சியுமான பதினொரு அத்தியாயங்களையும், அஜினவதீலாபம் அதனைப்பற்றியே ஐந்து அத்தியாயங்களையும்; பிரியதர்சனு லாபம் 1. தெய்வாக்யானம், 2-5. புருஷகாரகதை 6. நந்தோபநந்தகதை, 7 பிரியதர்சனுலாபம், 8. கோமுகவிவாகாக்யானம், 6 பிரியதர்சனுஸ்தான தர்சனம், 10—12 பிரியதர்சன விவாகம் என்ற பன்னிரண்டு அத்தியாயங்களையும்; 8. பாகீரதியசோலாபம் என்ற கடைப் பகுதி ஒரு அத்தியாயத்தையுமுடையது. இவற்றின் சுருக்கம்வருமாறு.

---

## முதற் சருக்கம்

உஞ்சை நகரத்தை யாண்ட மகாசேனன் என்ற பிரத்யோதனன் மிக்க கொடியவனுக இருந்து விண்ணுலகை அடைந்தான்*. பிரத்தியோதனன் மூத்த மகனுன கோபாலன் தன் தகப்பனைக்குத்திக்கொன்று விட்டதாக மக்கள் அவன்மேலே ஓர் அடாப் பழியைச் சுமத்தினர். அமைச்சர்கள் அவ்வாறு செய்யப்பட வில்லையென்றும் கடைக்காலத்தில் பிரத்யோதனனது அடாச்செயலைப் பொறுக்கமுடியாத கோபாலன் அவனைச் சிறையிட்டுப் பாதுகாத்து வந்தனனென்றும் ஒரு செய்தியைக் கிளப்பிவிட்டனர். இதனைக் கேட்ட கோபாலன் அடங்காத்துயரமும் ஆச்சரியமும் அடைந்து தனது இராச்சியத்தைத் தன் தம்பியான பாலகனுக்கீந்து துறவுபூண்டான்.

பாலகன் அரசாளும் திறமையற்றவனுகையால் முதலில் துக்கமுடையவனுகவும், பின்னர்க் காமுகனுகவும் முடிவில் மிகுந்த பக்தியுடையவனுகவுமிருந்து இராச்சியத்தை இழந்துவிடுவதாகக் கனவு கண்டான். இவன் ஒருநாள் கீழே விழுந்துவிடவே அது சாக்காக இவன் கோபாலனது மகனுன அவந்திவர்த்தனனுக்குப் பட்டங்கட்டிவிட்டுக் காசிப ஆரியர் தவஞ்செய்யும்பர்ணசாலைக்குச்சென்று துறவறம் பூண்டான்.

அவந்திவர்த்தனன் அரசாளுகையில் தெருவில் யானையைப் பழக்கக் கொண்டுசெல்லும் மங்கை பொருத்தியைக் கண்டு மோகிக்க, இவனது பாட்டியும் பிரத்யோதனன் தமையியுமான அங்காரவதி அவள் ஒரு அரமகளென்றும், சாபத்தால் மாணுட மங்கையாக விருக்கின்றுளென்றும் கூறிப்பின் சுரசமஞ்சரி என்னும் அம்மங்கையை அவள் தகப்பனது உடன்பாடு பெற்று மணஞ்செய்வித்தாள்.

சுரசமஞ்சரி தன் தகப்பன் தன்னை இப்பகன் என்ற வித்தியாதரனுக்கு மணந்து கொடுப்பதாகச் சொல்லியிருந்ததாகவும் அந்த இப்பகன் என்ற வித்யாதரன் நாரதர் சாபத்தால் சண்டாளனுகிவிட்டதாகவும் கூறினுள். அந்த நாட்டிலே நீர்விழா நடந்த காலத்து இப்பகன் சுரசமஞ்சரியையும் அவந்திவர்த்தனனையும் கவர்ந்து செல்ல, அதனைக் கண்ணுற்ற விஞ்சைய ஞெருவன் அந்த இப்பகனை அவனுல் துன்புறும் சுரசமஞ்சரி அவந்திவர்த்தனன் இவர்களோடு தனது அம்மானுன பாலகனைக் காணவந்த வித்தியாதரச் சக்கரவர்த்தியாம் நரவாகன தத்தன் முன் கொண்டுவந்து நிறுத்தினுன். அங்காரவதியும் தன் மகனுன பாலகனுக்கு இந்தச் செய்தியைச் சொல்லிவிட்டாள். விஞ்சையர் இறைவனுன நரவாகன தத்தன் சுரசமஞ்சரியை அவந்திவர்த்தனனிடம் சேர்ப்பித்ததோடு உஞ்சைக்கு வந்துசேர்ந்தான். அங்கு நரவாகன தத்தனைக்காண மக்கள் திரள்திரளாகக் கூடினர்.

---

## இரண்டாவது சருக்கம்.

ஆச்சிரமத்திலுள்ள இருடிகள் நரவாகன தத்தனைக் கண்டபோது அவனது சீவிய சரிதத்தைக் கூறும்படி கேட்டுக்கொள்ள, அவன் தன் வரலாற்றை இருடிகள் தவிரப் பிறர் கேட்காத வண்ணம் கௌரியின் வரம்பெற்றுத் தான் இருபத்தாறு மனைவியரை மணந்து கொண்ட செய்தியையும் விஞ்சையர்க்கிறைவனுன செய்தியையும் பின்வருமாறு கூறுகிறுன்*.

தனது தகப்பனுன உதயணன் வாசவதத்தை பத்மாவதி ஆகிய இருவரையும் மணந்தனன். அவர்கட்கு நீண்டநாள் மகப்பேறு வாய்க்கவில்லை. ஒரு நாள் வாசவதத்தை பிங்களிகை என்ற மாதை அவளுடைய பல பிள்ளைகளோடும் தெருவழியேபோகக்கண்டாள். அந்தப் பிங்களிகை விதிக்கு மாறுக திருமாலின் அருளால் தனக்குப் பலபிள்ளைகள் பிறந்தமையைக் கூறினுள். அந்தக்கதையைக் கேட்ட உதயணன் தானும் நோன்பிருந்து பிள்ளைப்பேறடைய விரும்பி நாட்டுமக்களை நோன்பிருக்கவேண்டினுன். தானும் குபேரனைக் குறித்து நோன்புபூண்டான். பத்மாவதி நோய்வாய்ப்பட்டிருந்ததால் வாசவதத்தை அந் நோன்பை மேற்கொண்டாள்.

ஒருநாள் அரசனும் அரசியும் குபேரனிடம் சென்றதாகவும் அவன் அவர்கட்கு அணியொன்று அளித்ததாகவும் கனுக் கண்டனர். ஆதித்தியசருமன் என்னும் நிமித்தகன் கனுவைக்கேட்டு இவர்கட்கு ஓராண்மகவு பிறக்குமென்றும் அப்பிள்ளை உலகை வென்று விஞ்சையர்க்கிறைவனுக வாழ்வானென்றும் கூறினுன். உதயணனது அமைச்சர்களான யூகி முதலாயினர்க்கும் இவ்வாறே பிள்ளைகள் பிறக்குமென்றும் அவன் கூறினுன்.

வாசவதத்தை கருவுற்றிருந்தபோது அவளுக்கு ஒரு விருப்பம் உண்டாயிற்று. அதனை வெளியிடத் தயங்கினுள். இவ்வாறு தன் கருத்தை வெளியிடத் தயங்குவதைக் கண்ட மிருகாவதி தான் கொண்டிருந்தபொழுது தானும் செவ்வாடை யணிவதோடு நகரிலுள்ளாரும் செவ்வாடை யணிந்து எங்கும் சிவப்பு நிறைந்திருக்க விரும்பியதாகவும் அவ்வாறே அரசன் செய்வித்தகாலத்திலே பறவை யொன்று[1] தன்னைக் கவர்ந்து சென்று கானகத்தில்விட, அங்குவந்த முனிவ ரிருவர் தன்னை வசிட்டரது இருக்கைக்கு அழைத்துச் சென்றதாகவும், ஆண்டு உதயணன் பிறந்ததாகவும் கூறினுள். மேலும் தொடர்ந்து பின்வருமாறு கூறினுள். உதயணன் முனிவ ரிருக்கையில் வளர்ந்து வருகையில் அவருடைய கட்டளைக்கு மாறுகக் காட்டிற் சென்றனன். ஒருநாள் இவன் காட்டிலுள்ள ஊருணியில் விளையாடிக் கொண்டிருக்கையில் சிலநாககன்னிகைகளைக் கண்டான். அவர்கள் இவனைத் தங்கள் நகரான போகவதிக்குத் தூக்கிச் சென்றனர். அவன் திரும்பி வந்து நடந்த செய்தியை வசிஷ்டருக்குச் சொல்ல, அவர் மறுபடியும் இவனை நாகலோக மனுப்பினர். இவன் அங்குச் சென்று திரும்புகையில் கோடபதி (கோஷவதி) என்ற யாழைப் பெற்று வந்தான்[2]. உதயணன் கல்வி கற்று நிறைவேறினதும், அவனையும் அவனுடையதாய் மிருகாவதியையும் கௌசாம்பிக்கு வசிஷ்ட முனிவர் அனுப்பி வைத்தார். இவர்கள் அங்குச் சென்று ஒரு உபவனத்திற் றங்கியிருந்தபொழுது பத்மபஞ்சிகா என்ற மந்திரத்தை உதயணன் யாழில் வாசித்தான். காவலர் இச்செய்தியை அரசனுக்கு அறிவிக்கவே அரசன் இழந்த தனது மனைவியையும் மகனையும் அடையாளங்கண்டு பெற்று மகிழ்ந்தான். இவ்வாறு மிருகாவதிகூறவே வாசவதத்தை ஆகாயத்திற் பறந்து சென்று உலகமுழுவதும் சுற்றிப்பார்க்கத் தனக்கு விருப்பமிருப்பதாகக் கூறினுள்.

அரசனுன உதயணன் மதிமந்திரியான யூகியோடு ஆலோசிக்க, அவன் இது சிற்பிகளால் ஆகவேண்டிய காரியம் என்று சொல்லி அவர்களை யழைத்து விசாரித்தான். அவர்கள் பொறியமைக்குந்தொழிலில் யவனர்களே (Greeks) கைபோயவர்களென்று கூறினர். ஓர் அந்தணன் தோன்றிப் பின் வருங்கதையைச் சொல்லலானுன்.

காசியிலே பிரமதத்தன் ஆண்டு கொண்டிருக்கையில் மகாசேனனது நாட்டிலிருந்த விசுவபத்திரன் என்ற தச்சனெருவன் நாள்தோறும் காசிசென்று வேலையைச் செய்துவிட்டு இரவில் தன் மனைவி மக்களிருக்குமிடமான உஞ்சைக்கு விமோதப்பொறியொன்றில் வருவதுவழக்கம். இதனை ஒற்றர்களால் அறிந்த மகாசேனன் அவனை யழைத்துவரும்படி ஆள் அனுப்பினுன். இதனைக்கேள்வியுற்ற அந்தவிசுவபத்திரன்விமோதப்பொறியைக்காட்ட அஞ்சித்தன்பெண்டு பிள்ளைகளை உஞ்சையில் விட்டுவிட்டு ஓடிவிட்டான். அதனுலே தச்சர்கள் இந்த இரகசியத்தைச் சொல்ல மறுப்பார்கள் என்று அந்தணன் கூறினுன்.

இச்செய்தியைக் கேட்ட உதையணன் தச்சர்களை யொறுப்பது என்று தீர்மானிக்கையில் முன்னம் இவனுல் பஞ்சமந்திரத்தைக் கேட்டு முத்தியடைந்த பத்திராவதி என்ற பெண்யானை பத்திரன் என்ற பேரோடு தச்சனுருக்கொண்டு உதையணன்முன் தோன்றிற்று. பத்திரன் தான் ஆகாயத்திற் செல்லக்கூடிய பொறி செய்ய வல்லவனென்று கூறினுன். உதையணனும் பத்திரன் அந்த விதமான பொறியொன்றைச் செய்யச்சம்மதித்தான். சிறிது நாளில்தேர் ஆயத்தமாயிற்று.

அப்பொழுது நண்மதியமைச்சர்தம்மனைவியரும் கருவுற்றிருந்தமையின் அவர்களும் அவ்வாறு உலகைச் சுற்றிப்பார்க்க விருப்புடையராக இருப்பதாக உதையணன் அறிந்தான். அவன் பத்திரனென்னும் தச்சனது அனுமதி பெற்று, தன் மனைவியர், அமைச்சர், அவர்களது மனைவியர் இவர்களோடுங்கூட ஆகாயத்திற் பறந்து சென்று உலகைச் சுற்றிப்பார்த்து அவந்தியை யடைந்தான். உதயணன் அவந்திவந்து சேர்ந்ததும் இந்த இயந்திர வூர்தியைச் செய்துதந்த பத்திரனை யழைத்துச் சன்மானம் செய்ய முயலுகையில், பத்திரன் தான் ஒருவிஞ்சையனென்றும் சாபத்தால் பிரச்சோதனனிடம் பத்திராவதி என்ற பெண்யானையாக இருந்ததாகவும், உதயணனும் வாசவதத்தையும் தன்மேலேறி ஊரைவிட்டகன்று காட்டில் வந்தபொழுது தான் களைத்து இறக்கையில் உதயணன் தன்னிடம் அன்பு பாராட்டிப் பஞ்சமந்திரத்தைக்காதிலோத அதனுல் தான்பூர்வஜன்மம்அடைந்ததாகவும் கூறித் தான் தன் செய்நன்றி மறவாமையைப் பலவழிகளிலும் காட்ட முற்பட்டிருப்பதாகவுஞ் சொல்லி விடைபெற்றுச் சென்றுன்.

வாசவதத்தை சின்னுட் கழித்து நல்ல நாளிலே ஓர் ஆண் பிள்ளையைப் பெற்றுள். யூகி முதலாய நான்கு அமைச்சரின் மனைவிமார்களும் ஒவ்வொரு ஆண் பிள்ளையைப் பெற்றனர். உதயணன் குபேரனை நோக்கி வரங்கிடந்து பிள்ளை பெற்றதால் அந்தப் பிள்ளைக்கு நரவாகன தத்தன்[1] என்று பேரிட்டான். அமைச்சர் மக்களுக்கு முறையே அரிசிகன் மாருபூதிகன், தவந்தகன், கோமுகன் எனப் பெயரிட்டனர். இவர்கள் ஐவரும் சேர்ந்து கல்வி பயின்றதோடு ஒரே தாய் வயிற்றுப் பிள்ளைகளைப்போல வளர்ந்து வந்தனர். (தொடரும்.)

---

* பெருங்கதையில் இவன் [illegible] விருந்ததாகக் [illegible]

* மூலத்தில் கதை தன்மையிடத்திலேயே சொல்லுகிறது.

1. பிரச்சோதனனுகிய சேடக முனிவர் என்று கூறும் பெருங்கதை.

2. கோடபதியைப் பிரமசுந்தர முனிவர் அளித்ததாகப் பெருங்கதை கூறும்.

1. குபேரனுக்கு வாகனமாக அமைந்திருப்பது மானிடன். நரனை வாகனமாக உடையவனுகையால் இந்தப் பெயர் இவனுக்கு இடலாயிற்று.

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட்ஸ் நஞ்சன்கூடு "சத்வைத்யசாலை" மருந்துகள்
"ஆல்மண்டைன்" (டானிக்). "பாலக்ஸ்" பேதிமாத்திரை. "ஸ்ப்ளிவரால்" (குழந்தை கட்டிக்கு)
கோரோஜனை மாத்திரை தயவுசெய்து கவனித்து வாங்கவும்.
சுமார் 300 போலிகள் மாற்றும்.
நஞ்சன்கூடு பல்பொடி
[பன்மக்கள் வைத்தியர்களுக்கு மட்டும்] [அட்வான்ஸுடன் ஆர்டர் செய்யவும்.]

# கம்பர் சிருட்டியில் பிறந்த கற்பினாள்

[220-வது பக்கத் தொடர்ச்சி]

இந்தப் பாட்டைச் சில எழுத்து மாற்றங்களுடன் சொல்வது முண்டு. அதாவது "தக்கதன் றென்னத் தேராள்" என்பதைத் "தக்கதன் றென்ன வோராள்." என்பர். இதில் பெரிதும் பொருள் மாற்றமில்லை. "ஒக்க உண்டிருத்தலோடு முணர்ந்தனள்" என்பதில், தேவேந்திரன் என்று உணர்ந்துகொண்டாள், 'உணர்ந்த பின்னும்' தக்கதன் றென்னத் தேராள்' என்று சிலர் பொருள் கூறுவர். அப்பொருளை வான்மீகரைத் துணைகொண்டு வழங்கவேண்டுமே யல்லாமல் கம்பர்பால் அதற்குக் காரணங் காணமுடியாது. மற்றும் "ஒக்கவுண் டிருத்தலோடு முணர்ந்தனள் உணர்ந்த பின்னர்-தக்கதன் றென்னவோராத் தாழ்த்தனளிருப்ப" என்பது—புதுநல மதுவின் தேறல் என்று உணர்ந்தனள், உணர்ந்த பின்னரும், மற்றோர் முறை இந்திரன் போகம் துய்க்க முயல ஐயுற்ற அகலிகை இனித் 'தக்க தன்றென்ன வோரா' அதாவது தக்கதல்ல வென்று ஓர்ந்து 'தாழ்ந்தனள்' காலந்தாழ்த்தினள், இப்படி யிருக்கும்போதே முக்கணனையவாற்றல் முனிவனு முடுக வந்தான்' என்கிறார். இதனால் அகலிகை இந்திரன்பால் எக்காலத்திலேயும் இச்சையுடையவள் அல்லள், போலிகௌதமராகிய இந்திரனால் போகம் நுகர்ந்தபோதும் தன் நாயகபோகமென்றே இருந்துவிட்டாள் என்பது விளங்குகிறது. இதற்கு ஏற்ப, முடுக வந்த சரந்தரு சாபமல்லாமற் றடுப்பரும் சாபம்வல்ல— வரந்தரு முனிவ னெய்த வருதலும் வெருவினாள்......நின்றாள், என்கிறார். வெளியே சென்ற கௌதமர் வருதலைக் கண்டதும் பயந்தாள்; திக்பிரமை கொண்டு ஒன்றுந் தோன்றாதவளாய் நின்றுவிட்டாள். ஏன்? இப்போது புதுநல இன்பந் தந்தவரும் கௌதமர், வருபவரும் கௌதமர்; கண்டனள். என்னே! மோசம் போனோமே! என்று இடி விழுந்ததுபோல் ஒன்றுந் தோன்றாது நின்றுவிட்டாள். "புரந்தரன் நடுங்கி யாங்கோர் பூசையாய்ப் போகலுற்றான்."

இந்திரன் கௌதமரால் சாபம் பெற்றுச் சென்றதும் கௌதமர் அகலிகையை நோக்கி "விலைமகள் அனைய நீயும் கல்லியலாதி" என்று சபித்தார். அவளை விசுவாமித்திரரோ மிக இரக்கத்தோடு மெல்லியலாள் என்கின்றார். அத்தகையவளைக் 'கல்லியலாகச்' செய்த வருத்தம் தோன்றக் கூறுவதேபோ லிருக்கிறது. இங்கே கௌதமர் சாபந்தரும் சொற்களின் தோற்றம் நோக்கும்போது "இந்திரன் தீவினை நயந்து செய்தான், அவன் சாபம் அடைதல் தகுதியாயினும் உலகம் ஒருவாறு உன்னையுந்தான் பழிக்கும், அப்பழியில்லாது போதற்கு 'நீயும்' கல்லியலாதி" என்ற கருத்துத் தரும் பொருளடக்க முள்ளதாய்க் காணப்படுகிறது. இன்னும், 'அவன் இன்பத்தால் நீ யின்பந் துய்த்தாயில்லை. அதற்கேற்ப நான்தரும் சாபத்தால் வரும் துன்பத்தைத் துய்த்தற்கியலாத கல்லாய்க் கிடப்பாய்' என்ற கருத்துடைய 'கல்லியலாதி' யென்றார். இதனால் உலகப்பழி நீங்குமாறும், அவள் உத்தம குணம் துலங்குமாறும் கௌதமர் தந்தது அருட்சாபம் என்று விளங்குகிறது. வான்மீகரால் கூறப்படும் அகலிகை இந்திரனென்று அறிந்தாள், வரவேற்றாள், மகிழ்ந்தாள், இன்பம் அன்போடு நுகர்ந்தாள். தன்னை யென்றும் மறவாதிருக்கக் கேட்டுக்கொண்டனள், தன்னையும் அவனையும் காத்துக்கொள்ளும் உபாயம் தேடும்படி நினைவுபடுத்தினாள். ஆதலால், உருவற்றுக் காற்றேஉணவாகச் சாம்பலில் புரண்டுகொண்டு கிடந்திட வால்மீகருடைய கௌதமர் கடுந்தண்டனை விதித்தார். அறிந்து குற்றம்செய்தவள் துன்பமும் மனமறிய அனுபவிக்கும் சாபம் தந்தார். இதனாலேயே வடமொழி அகலிகைக்கும் தென்மொழி அகலிகைக்கும் உள்ள வாசி எளிதில் விளங்கும். தென்மொழி அகலிகை தன்நாயகன் தந்த அருட்சாபத்தின் நுட்பம் அறிந்து குற்றம் தன்னுடையதாகவே ஏற்று,

"பிழைத்தது பொறுத்த லென்றும்
பெரியவர் கடனே யன்பால்
அழற்பெருங் கடவு ளன்னாய்
முடிவிதற் கருளுக"

என்று இவள் கேட்டாள். 'அன்பால் அழற்பெருங் கடவுளன்னாய்' என்றதினாலேயே கௌதமர் தன்னை யாட்கொள்ளவே இவ்விதமான வொரு சாபம் தந்தார் என்று அகலிகை அறிந்தாள் என்று இச்சொல்லால் கம்பர் நமக்குச் சூசிப்பிக்கிறார். உண்மையில் தன் மன மறியாது உடல் குற்றத்தின் பாற்பட்டுப் போயினும் உலகப்பழிப்புக் கிடனாகத் தன்னுடலைத் தாங்குவது தனக்கும் அருவருப்பு தன்நாயகன் பணிக்கும் பயனில்லை என, தன் அருவருப்பு நீங்கவும் தன்நாயகன் பணிக்கு உரியதாகவும் ஏற்ற கழுவாய்த் (பிராயச்சித்தம்) தந்தனனே என்ற மகிழ்வால் 'அன்பால் அழற்பெருங்கடவுளன்னாய்,' என்கின்றாள். மலின மடைந்த பொன்னைப் புடம்வைத்தால் முன்னிருந்த பொன்னொளி பெறுதலேபோல் என்னை யாக்கச் சாபம் தந்த அண்ணலே, என்று மகிழ்ந்தவளாய் "அழற்பெருங் கடவுளன்னாய்" என்கின்றாள். நாயகன் தொண்டுக்கு என்று உரியவளாவேன் என விரைவு தூண்ட 'முடிவிதற்கருளுக' என்று கேட்கிறாள். அதற்குக் கௌதமர் ஆண்டுகள் யுகங்கள் குறிப்பிடாமல்

"தழைத்துவண் டிமிருந் தண்டார்த்தசரதராமனென்பான்
கழற்றுகள் கதுவ இந்தக் கல்லுருத் தவிர்தி"

யென்றான். இதனால் தன் மனைவிபால் குற்றமின்மை அறிந்த தன் உள்ளக்கிடக்கையைச் சாபநிவர்த்தியில் விளங்கவைக்கின்றார். கம்பரில் இல்லாத தொன்றை வான்மீகர் கூறியுளர். "வடதிசையில் தவம் செய்த கோசிகரின் நிலையைக் கெடுக்க இந்திரனது தூண்டுதலால் வந்த அரம்பையை விசுவாமித்திரன் 'பதினாயிரமாண்டுகல்லாய்க்கிடப்பாய். இச்சாபமுடிவில் ஓர் பிராமணனால் விடுவிக்கப்படுவாய்' என்றுசபாமும் அதன் நீக்கமும் புகலலானார். கோசிகன் தவத்தைக் கெடுக்க மனமிசையாது தடுத்துவிட்ட அரம்பையை இந்திரன் பல சொல்லித் தேற்றவும் அவன் சொல் மறுக்க முடியாமல் வந்தவள் தன் உள்ள மறிந்தே காதியின் மகன் கல்லாய்க் கிடக்கும்படி அவளுக்குச் சாபமிட்டான். என்றாலும் மனம் இசையாத குற்றத்திற்குச் சாபம் கல்லாதலும் தீயகாரியமென் றறிந்துளாளாதலால் முடிவிலொரு பயனின்மையுமாயது; ஆண்டுகள் குறித்தார், அந்தணனால் விடுவிக்கப்படுவாய் என்



றார். மனமறியாமல் நேர்ந்த குற்றத்திற்கு முடிவில் கண்ணின்று தோன்றிக் கடவுட்காட்சி காணலாகின்றது. ஆதலால், மனமறிந்து குற்றம் செய்யாத மாபெரும் பத்தினி அகலிகை யென்பதைத் தன்நாயகனும் அறிந்தே சாபம்போன்று காணப்படுவதோர் வரத்தினை அருள்புரிந்தார் எனக் கம்பர் விளங்கவைக்கின்றார். இக்குறிப்பு நாம் தெரிந்துகொள்ளுதற்கே கம்பர் அக்கௌதமரை 'வரந்தருமுனிவன்' என்று முதலிலேயே நினைவுபடுத்துகிறார். இப்பாட்டில் 'தடுப்பரும் சாபம்வல்ல வரந்தரு முனிவன்' என்கின்றார். இதனால் நிக்ரக சக்தி அநுக்ரக சக்தி இரண்டுமுள்ள கௌதமர் வந்தனர் என்றார். இச்சொல் நிரல்நிறை நோக்கும்போது அனுக்ரக சக்தி அடுத்த சொல்லாக வைக்கப்பட்டிருக்கின்றது. அதற்கேற்பவே அம்மகரிஷி இந்திரனுக்குப் பின்னரே அகலிகைக்குச் சாபம் (வரம்) தந்துள்ளார். அதுவும் அருட்சாபமென்று இதுவரையும் கண்டோம். இதனால் அகலிகைக்குச் சாபந்தந்திருப்பினும் அது அவள் நன்மையை முன்னிட்டே என்பதை உணர்வதோடு அவர் மனதில் அவளைக் கற்புடையவளென்றே கருதியிருக்கிறாரென்ற குறிப்புக்கள் போதிய அளவு நமக்குக் கிடைக்கலாகின்றன. அதனோடு மற்றுமொன்று: அதாவது, மகரிஷி வந்தவுடனே 'தீவிழி சிந்த நோக்கிச் செய்ததையுணர்ந்து' என்கின்றார் கம்பர். இதனால் முனிவர் தன் ஞானக்கண்ணால் நடந்த வரலாற்றின் உண்மை உணர்ந்துகொண்டார் என்பது விளங்குகிறது. உண்மையில் குற்றம் செய்தவர் எவரோ அவர்மீது கோபம் பிறத்தல்தான் இயற்கை. அதன்படி உண்மையுணர்ந்ததும் இந்திரனைநோக்கி "ஆயிரமாதர்க்குள்ள அறிகுறிநினக்குண்டாக" என்றுஇந்திரனுக்குமுதன் முதலில் சாபம்கொடுத்துவிடுகின்றார். இதனாலேயே இந்திரன்தான் குற்றவாளிஎன்பதுதெற்றெனவிளங்கும். இக்கருத்துப்படவே விசுவாமித்திரர்ஸ்ரீராமனிடம் கல்லுரு நீங்கி நின்ற அகலிகையின் வரலாறு சொல்லத்தொடங்கும்போதே 'தீவினைநயந்துசெய்த தேவர்கோன் தனக்குச்செங்கண்-ஆயிரமளித்தோன் பன்னி அகலிகையாகும்" என்றார். இதனால் தீய காரியத்தை நயந்து செய்தவன் தேவேந்திரனே யன்றி அகலிகை யல்லள் என்று அவள்தன் உள்ளக் கிடக்கையை முதலிலேயே பாயிரமாகவைத்து நூல் சொல்லத் தொடங்கினார். இதற்கு ஏற்பவே நம் திருவள்ளுவர் "ஐந்தவித்தா னாற்ற லகல்விசும்பு ளார்கோமான்-இந்திரனே சாலுங் கரி" என்றார். இதற்குஉரையெழுதவந்த பரிமேலழகியார் "தான் ஐந்தவியாது பாபமெய்தி நின்று அவித்தவனதாற்றல்உணர்த்தினானாகலின், இந்திரனே சாலுங் கரி யென்றார்" என்று வரைந்தார். இதனால், இந்திரன் மனம்செல்லும் வாயில்களாகிய ஐந்தையும் போன போக்கிலே போகவிட்ட தீயவனென்று விளக்கியதாயிற்று. இக்குறள் சொல்லவந்த அதிகாரம் 'நீத்தார்பெருமை' என்பது. இவ்வதிகாரத்துக்கு உரையெழுதிய மேற்படி பரிமேலழகியாரே "அஃதாவது முற்றுந்துறந்த முனிவரது பெருமை கூறுதல். அவ்வறமுதற்பொருள்களை உலகிற்கு உள்ளவாறுணர்த்துவார் அவராகலின், இது வான்சிறப்பின்பின் வைக்கப்பட்டது" என்றெழுதியுள்ளார். இதனால் நீத்தார் பெருமையில் சொல்லப்பெற்ற கௌதமர் அறமுதற்பொருள்களைத் தாம்உள்ளவாற உணர்பவரும் உலகிற்கு உள்ளவாறுஉணர்த்துபவரும் ஆகின்றார் ஆதலால் ஐந்தவியாது தீவினை நயந்துசெய்ததால்சாபமெய்தற்குரியவன் இந்திரனே என்பதும் இந்திரனைக் குறித்த ஆசிரியர் அகலிகையைக் குறிப்பிடாமையால் அவள் குற்றத்திற் குரியளல்லள்என்பதும் நடுநிலையுடையார்கௌதமர்என்பதும் குறளாசிரியர் கருத்தாகும். ஆக இம்முப்புலவர் கருத்தும் அகலிகை கற்பினுக்கரசி என்ற எண்ணத்தை நாமறியுமாறு கம்பர் குறிப்பாகக் காட்டிச்செல்லும் திறம் நாம் நன்கு உணர்ந்து மகிழவேண்டிய தொன்றாம். ஆரியப்புலவ ரிருவரோடு எண்ணிக்கையிலும் கருத்திலும் மாற்றமில்லாமல் தமிழ்ப்புலவராகின்ற அவ்வள்ளுவரோடு யானும் சேர்ந்து இருவராகின்றோம் என்று இறுமாந்து உரைப்பதேபோல் அகலிகையின் கற்பை உலகமறிய வெளிப்படுத்த வேண்டிப் பேரவாக்கொண்டிருந்த நம் கம்பருக்குச் சமயம் வாய்த்தது. அதாவது, அகலிகை கல்லுரு நீங்கியபின்னர் ஸ்ரீராம இலக்ஷ்மணரோடு அகலிகையையும் விசுவாமித்திரர் கௌதமரிடம் அழைத்துச் சென்று,

அஞ்சன வண்ணத் தான்றன்
அடித்துகள் கதுவா முன்னம்
வஞ்சிபோ லிடையாள் முன்னை
வண்ணத்த ளாகி நின்றாள்
நெஞ்சினாற் பிழைப்பி லாளை
நீயழைத் திடுதி யென்னக்
கஞ்சமா முனிவ னன்ன
முனிவனுங் கருத்துட் கொண்டான்

என்று கூறுகிறார். 'இதில் நெஞ்சினாற்பிழைப்பிலாளை நீயழைத் திடுதி' என்று கூறுவதால், எதை அறிந்து கொள்ள நாம் இதுகாறும் துருவித்துருவிப் பார்த்தோமோ அதை விசுவாமித்திரர்கௌதமர்பால்தெளிவாகச் சொல்லிவிடுகின்றார். இவ்வுண்மை கௌதமரும் அறிந்திருக்கின்றாராதலால், "கஞ்சமா முனிவனன்ன முனிவனுங் கருத்துட்கொண்டான்" என்று கம்பர் நமக்கு நினைவூட்டுகின்றார். உண்மை யென்று அதனை ஏற்றுக்கொண்டதாக அத் தொடர்மொழி நமக்குத் தெரிவிக்கிறது. சொன்னவன் உபசாரமாகச் சொல்லியிருத்த லாகாதோ என்ற ஐயத்தை நீக்கவே கேட்டவன் சாதாரணமானவனல்லன் என்று குறிப்பான்வேண்டி "கஞ்சமாமுனினன்ன முனிவன்" என்கின்றார் கம்பர். மேலும் கௌதமர் "தசரத ராமனென்பான் கழற்றுகள் கதுவ இந்தக் கல்லுருத் தவிர்தி" என்று சாபமிட்டார். அச்சாபத்தை நினைவுபடுத்தி, "குற்றமியற்றாத இவளுக்கு நீயிட்ட சாபத்தை இவள் ஏற்றுக்கொண்டு கிடந்தனள்." கற்பெனப் படுவது சொற்றிறம்பாமை யாதலால் தன்கற்பின் திறத்தால் கல்லுருவைத்தானே தாங்கி நீகுறிப்பிட்ட அத்தசரதராமன் வருகையைக் கண்டு,

"அஞ்சன வண்ணத் தான்றன்
அடித்துகள் கதுவா முன்னம்
வஞ்சிபோ லிடையாள் முன்னை
வண்ணத்த ளாகி நின்றாள்"

என்றார். இதனால், இவள் கல்லுருவானதும் நின் சாபத்தாலன்று, அதினின்றும் நீங்கியதும் தசரதராமன்றன் திருவடித்துகளாலன்றி, அவள் கற்பின் ஏற்றத்தாலேயே, என்று விசுவாமித்திரன் உரைக்கின்றான்போல் "அடித்துகள் கதுவாமுன்னம்" என்ற அடி பொருள் தருகின்றது. தன்நாயகனுக்குக் குறை நேராதவாறு தமக்கிருக்கும் ஆற்றலையும் அடக்கித் துன்பம் அநுபவித்தல் கற்புள்ள பெண்களின் இயற்கை. ஆதலால் அகலிகை கல்லாய்க்கிடந்து தனகணவன் கருத்தை நிறைவேற்றினாள். "சொல்லினாற் சுடுவேன் அது தூயவன் வில்லினாற்றற்கு மாசென்று வீசினேன்' னென்று சீதாபிராட்டியும் சொல்லிப்போந்தார். இங்ஙனம் அடங்கியிருத்தல் கற்புள்ளவர் இலக்கணம். கணவனுக்குத் தொண்டுபுரிதலே கற்பரசிகள் உஜ்ஜீவனமாதலால் பலநாள் கணவனுக்குத் தொண்டாற்றுதலின்றிப் பிரிந்து கல்லாய்க்கிடந்த அவ்வகலிகை தன்கணவன் தொண்டையேநினைத்துக்கொண்டிருந்த அவசரத்தில் 'தசரதராம னென்பான் கழற்றுகள் கதுவ' என்றிட்டிருந்த சாபத்தையு மறந்து 'அடித்துகள் கதுவா முன்னம்' அக்கல்லினின்றும் எழுந்துவிட்டாள் என்று கணவன் தொண்டிலே அவட்கு இருக்கும் ஆர்த்தியும் தெரிவித்ததாகும். இவ்வாறெல்லாம் அகலிகையின் கற்பை அலங்கரித்துச்சொல்லும் கம்பர்தம் பெற்றியை உம்பரும் மகிழ்வர்.

# சூரியன்

[223-வது பக்கத் தொடர்ச்சி]

## V. சூரிய குடும்பம்.

### 1. புதன் (Mercury)

*விரித ரும்புனற் றன்மையாய் மேதக விளங்கும்*
*புரவி மாவிரு நான்குடன் பூண்டுமண் பொதிந்த*
*இழிவெ றிந்துவா னியங்குறு மீர்ங்கதிர் மதியம்*
*அரிதி னீன்றருள் புதனுறை யணிமணித் தேரே.*

(இலிங்க புராணம் 55. 2)

ஒரு கோளே:— சூரியநாயனார் கோயிலினது பல பிராகாரங்களிலும் முதலாவதாக விளங்கும் புதமண்டலத்தை நோக்குவோம். இப் புதக் கிரகமானது மிகவும் பிரகாசிக்கின்ற வைரக்கல்லைப்போற் சொலிக்கின்றதொரு கோளமாகும். மற்றைய கோளங்களைக் காட்டிலும் சூரியனுக்கு வெகு சமீபத்தில் இருப்பதால், இஃது எப்பொழுதும் சூரிய வெளிச்சத்தில் முழுகிக் கிடக்கின்றது. சிலபோது அதிகாலையில் கிழக்கிலும், சிலபோது மாலையில் மேற்கிலும், அடிவானத்தில், இப்புதனைக் காண்கிறோம். அப்போது, பெரியதொரு நக்ஷத்திரத்தைப்போல மின்னிஒளிர்கின்றது. நக்ஷத்திரங்களே மின்னி யொளிர்வனவாம், கோள்களோ மின்னாமல் நிலைநின்று ஒளிர்வன; ஆதலின், இக்கோள், மின்னுவதைக் காணும்போது, 'ஈதொரு நக்ஷத்திரமோ' என்ற ஐயம், பலர்க்கும் எழுந்திடலாம். ஆயினும், தூர திருஷ்டிக் கண்ணாடி வழியே நோக்கும்போது, மின்னொளியைக் காணாமல், நிலைத்ததோர் ஒளியையே காண்கிறோம். நக்ஷத்திரங்களைப் போல, வானத்திலே என்றும் ஒரே உடுக்கூட்டத்திடையே பொருந்தியிராமல், இது, பல உடுக்கூட்டங்களிடையேயும் சென்றுவரக் காண்கிறோம். இதனால், இந்தப் புதனை ஒரு கோள் என்றே கூறுதல் வேண்டும்.

அளவு:—இது, பூமிக்கும் சூரியனுக்கும் இடையே மேலோ கீழோ வரும் தருணங்களில் தான், காலையில் அல்லது மாலையில், நமக்குத் தரிசனம் தருகின்றது. ஏனைய காலங்களில், நமது கண்களுக்குப் புலனாவதில்லை. நமது சூரியோதயத்திற்குச் சற்றேறக்குறைய ஒரு மணி நேரத்திற்கு முன்னிருந்தும், சூரியாஸ்தமனத்திற்கு ஒரு மணி நேரத்திற்குப் பின்னர் வரையும், இது தோன்றுகிறது. இதன் காரணம், இது சூரியனுக்கு வெகு சமீபத்தில் இருப்பதேயாம். சமீபம் என்றால் இண்டொரு கல்லல்ல. ஏனைய கிரகங்களைக் காட்டிலும் சூரியனுக்குச் சமீபத்தில்இருக்கின்றதென்பதே நாம் கூற வந்ததாம். சூரியனுக்கு 35, 958,000 கல் தொலைவில், இக்கிரகம் விளங்குகின்றது. இவ்வளவு தூரமும், வானத்தே, பாஸ்கரனிலிருந்து ஒரு முழம்போலத் தோன்றும். இக்கிரகம், சூரியனைச் சுற்றிவருவதற்குச் சுமார் 88நாட்கள் செல்லுகின்றன. இக்கோளம் நமது பூமியைவிட மிகச்சிறியது. இதன் எடையோ பூமியின் எடையில்இருபத்தேழில்ஒருபங்காகும். இதன்குறுக்களவு 3000கல். இது பூமியின் குறுக்களவின் காலேஅரைக்காற்பங்கே யாகும். சூரியனை நோக்கப் பூமியைவிட, இரண்டரை மடங்கு அதிக சமீபத்தில் இருக்கின்றது. ஆனபடியால், புதனிலிருந்து நோக்கினால், சூரியன் நமக்குத்தோன்றும் அளவைவிட ஏழு மடங்கு பெரிதாகத் தோன்றுதல் வேண்டும்; அதற்கேற்ப அதிக பிரகாசமாகவும் விளங்குதல் வேண்டும்.

வளர்பிறை; தேய்பிறை:—இக்காலத்தில் நமது நக்ஷத்திரசாலையிலுள்ள தூரதிருஷ்டி முதலிய கருவிகளைக் கொண்டு, இக்கோளத்தை ஆராய்ந்து வான சாஸ்திரிகள் படங்கள் பிடித்துள்ளார்கள். இவ்வாராய்ச்சியின் பயனாகப் புதக் கிரகமானது சந்திரனைப் போலவே வளர்ந்தும் தேய்ந்தும் வருகின்றதென்று தெளிவாகிறது. இதனிலொரு வியப்புமுண்டு. இக்கிரகமானது அர்த்த சந்திர வடிவாக எட்டாம்பிறை போலத் தோன்றும்போதுதான், பேரொளியோடும் விளங்குகிறது; முழுதும் ஒளி நிறைந்த புத பௌர்ணமியிலோ, இக்கிரகம் அத்துணைப் பெரிதாகவோ, பேரொளியோடோ தோன்றுவதில்லை. ஊனக் கண்களினால் பார்க்கும்பொழுது, இதன் பிறைவடிவமோ பேரொளிப் பெரும்பிழம்பாகவும், இதன் நிறை வடிவமோ சிற்றொளிச் சிறு பிழம்பாகவும், தோன்றுவதே இயல்பென்பர் வான சாஸ்திரிகள். இம்முறையிலே, இக்கோளம், நமது சந்திரனுக்கு மாறாக விளங்குகிறது.

உயிருண்டோ?:—புதன், சூரியனைச் சுற்றி வருவதோடு தன்னைத்தானும் சுற்றி வருகிறது. இதனாலே நாட்கள் பிறக்கின்றன. புதக் கிரகத்தில், ஒரு நாள் நம்முடைய மணிக்கணக்கின்படி சுமார் 25 மணி நேரம் உள்ளதாகும். இது சூரியனுக்கருகே இருப்பதால் சூரியவெப்பம் மிகுந்திருக்கிறது. அங்கே நீர் நிலைகளே இல்லை. வாயுவும் எப்போதும் கொதித்துக் கிடக்கின்றது. இதனுடைய துருவமண்டலமேனும், எந்தப் போதாவது குளிர்ந்திருக்குமோ என்பதை நிர்ணயிக்கவும் முடியவில்லை. தூரதிருஷ்டிக் கண்ணாடியாலும், ஒளி உடைக்கும் கருவியாலும், துருவ மண்டல ஒளியையும், நாடி மண்டல ஒளியையும், ஆராயுங்காலையில், இதன் துருவ மண்டலமே அதிக உஷ்ணமுள்ளதெனத் தெரியவருகிறது. பனிக்கட்டி எவ்வாறு வெயில் பட்டதும் நம்முலகில் உருகிவிடுகின்றதோ, அதுபோலப் புதனிலே, ஈயம், காற்றுப் பட்டவுடனே உருகிவிடுமாம்! அத்துணைக் கொதிப்புள்ளதாகும் அக்கிரகம். ஆகவே, நமது பூமியிலே வசிக்கும் பிராணிகள் அங்கே உயிர்வாழ முடியாது.

### 2. வெள்ளி (Venus)

*புள்ளி யற்கலி மாவொரு பத்துடன் பூண்டு*
*வெள்ளி தேரொளிர் வெள்ளியின் விளங்கிடும்.*

(இலிங்க புராணம் 52 - 3)

பூமியே போன்றது:—இக்கோளத்தைவிட்டு அப்பால் வெளியே சென்றக்கால், சூரியனுக்குச் சுமார் 66,750,000 கல் தொலைவிலுள்ள இரண்டாம் பிராகாரத்தில், வெள்ளி சுற்றிவருவதை நாம் காண்கின்றோம். இக்கோள் சற்றேறக்குறைய நமது பூமியின் அளவே தன்னளவாய், பூமியின் எடையே, தன் எடையாகக் கொண்டு விளங்குகிறது. இதன் குறுக்களவு 7660 கல் என வான சாஸ்திரிகள் கணக்கிட்டு உள்ளார்கள். இது சூரியனைச் சுற்றிவர 225 நாட்கள் செல்லுகின்றன. இக்கோளை மப்புமூடிய மண்டலம் கப்பிக் கிடத்தலால், அதனுள்ளமைப்புக்கண்ணுக்குப் புலனாகாமல் மயங்கிக் கிடக்கின்றது. ஆதலின், தன்னைத்தான் சுற்றுவது இத்தனை நாளில்தான் என எல்லோரும் ஒரு முடிபுக்கு வந்தபாடில்லை. ஒரு சிலர் சூரியனைச் சுற்றிவர எத்தனை நாட்கள் செல்லுகின்றனவோ, அத்தனை நாட்களே இது தன்னைத்தான் சுற்றிவரவும் செல்லுகின்றன, என்பர். மற்றையாரோ, ஏறக்குறைய 24 மணி நேரம் 23 மணி 21 நிமிஷம் பிடிக்கின்றது என்பர். ஈதுண்மையானால், இக்கோளும் நமது பூமியைப்போலவே விளங்குதலால், ஈதும் ஜீவராசிகள் வாழத்தக்க இடமாம்என்று வான சாஸ்திரிகள் கருதுகின்றனர். பனிமூடிய துருவத்தோடு விளங்கும் இக்கோளத்திலே, நம்மைப்போன்ற மாந்தர்கள்உயிர்வாழாவிடினும், கலிவர் (Gulliver) கண்ட இராக்கதக் கூட்டமாம் (Brobdignagians) பனைவடிவத்தோர் இதன்கண் உயிர் வாழலாம் என அநுமானிக்கலாம். சூரியனை வெள்ளியிலிருந்து காண்போமானால் நம் கண்ணுக்குத் தோன்றுவதைவிட இருமடங்கு பெரியவனாகத் தோன்றுவானும். அவனது உஷ்ணமும் அதற்குத் தக்கவாறு அதிகரித்தே தோன்றும்.

புராணம்:—இந்துக்கள் இக்கிரகத்தை அசுரகுருவாம் சுக்கிராச்சாரி என்பர். இவனுக்கு ஒரு கண் இல்லையாம். இதுவன்றியும், புதிதாக ஒரு வீட்டிலே குடித்தனம்செய்யப் போவதானால், இந்தக் கோள் எங்கே இருக்கின்றது என்று கவனிக்கின்றார்கள். வெள்ளி எதிராயிருக்கின் குடியேறுவதில்லை. மழைக்கும் இதற்கும் நெருங்கிய ஒரு தொடர்புண்டு எனக் கருதி, இதனை மழைக்கோள் எனவும் நம்மவர்கள் வழங்கி வருகின்றனர். மழை பெய்யும்போது கோள்கள் நிற்கின்ற நிலையை இவ்வத்தியாயத்தின் முடிவிலே வரும் பரிபாடல் விளக்குகின்றது. கிரேக்கர்கள் பெண்ணழகிற்கும் பெண்ணன்பிற்கும் பெருந்தலைவியாம் கடவுட் பிராட்டியாகக் கொண்டு, வீனஸ் (Venus) எனப் பெயர் தந்து, இதனை வணங்கிவந்தனர்; இப்பிராட்டியின் வடிவம், பெண்ணழகே பேரழகு எடுத்ததுபோலும், என்பர்.

கண் காட்சி:—நமது கண்களுக்குப் புலனாகும் கிரகங்களில், மிகப் பெரிதாயும், ஒப்பற்ற வெண்ணிறத்தோடும், இது தோன்றுகின்றது. புதக்கிரகத்தைப் போலவே, ஈதும், சூரிய வெளிச்சத்திலே, எப்போதும் முழுகிக்கிடக்கிறது. இது, நமது உச்சிக்கு வருவதில்லை; மாலைவேளையில், மேற்குத் திக்கில், ஒரு பனைமரம் உயரத்தில் தோன்றி, இரண்டு மணி நேரத்திற்கெல்லாம் அஸ்தமிக்கிறது. இக்காட்சியை ஆறு மாதம் வரை, அத்திக்கிலே காணலாம்; பின்னர்ச் சிறிது காலம் மறைந்திருக்கும்; இதனைச் சுக்கிரமூடம் என்பர். பின்னர்க் காலை வேளைகளில், சுமார் ஒன்பது மாதம் தொடர்ந்து, சூரியோதயத்திற்கு இரண்டுமணி நேரம் முன்னர்க் கிழக்குத்திக்கில், இக்கோள் உதிக்கும். இவ்வாறு மாறிமாறிக் கிழக்கிலும் மேற்கிலும் இது காட்சி தந்துவரும்.

தூரதிருஷ்டி:—தூரதிருஷ்டிக்கு, இஃது, எவ்வாறு தோன்றுகிறது எனப் பார்ப்போம். தூரதிருஷ்டி வழியே பார்ப்பதற்கு எது நல்லதருணம்? புதனும் சுக்கிரனும் சூரியனைச் சுற்றிவருகையில், நேராகப் பூமிக்கும் சூரியனுக்கும் இடையில் வரும் நிலையினை அகக்கூட்ட நிலை என்பர்; இவை இவ்வாறு இடையில் அன்றி, அப்புறத்தே வந்து, பூமியோடும் சூரியனோடும் ஒரு நிரையாய், நேரேநிற்கும் நிலையைப் புறக்கூட்ட நிலை எனலைபர். இந்த இரண்டுநிலைகளிலும், இவை இரண்டும், நமது கண்ணுக்குத் தோன்றாமல், சூரிய வெளிச்சத்தில் ஆழ்ந்தமிழ்ந்து கிடக்கின்றன. சூரியனுக்கு மேற்புறமாக ஓடும் நிலைக்கு மேல் நீட்சி நிலை, என்ற பெயரைத் தந்திருக்கின்றனர், கீழ்ப்புறமாக ஓடும் நிலைக்கு கீழ் நீட்சிநிலை, என்று பெயர். இந்த இரண்டு நிலைகளில்தான், இவற்றைத் தூரதிருஷ்டிக் கண்ணாடி கொண்டு நன்றாகக் காணலாம். தூரதிருஷ்டிக் கண்ணாடியின் வழியே காணும்போது, இக்கோளம், தூய வெண்ணிறமுடையதாய்த் துலங்குகிறது. மேடுபள்ளமின்றி, ஒரு வெள்ளைத் துணியைப் போர்த்துக்கொண்டு, பெண்ணொருத்தி, குந்தியிருப்பதுபோலவே, இது தோன்றும்போது, கிரேக்கர்கள் பெண் எனக் கூறியது, சிறிது பொருத்தமுடையதென்றே தோன்றுகிறது. வெள்ளி என்ற பெயரும் இதற்கு ஏற்புடையதேயாகும். இக்கோளும், சந்திரனைப்போலக் கலைகள் வளருவதும் தேய்வதுமாய் விளங்குகிறது. இக்கலைகளும், புதனுடைய கலைகளைப்போலத் தேயத் தேய ஒளி மிகுந்தும், கலைகள் வளர வளர, ஒளியு மளவும் குறைந்தும், விளங்கக் காண்கிறோம். இவ் வெள்ளியின் துருவஎல்லையில், பனி உறைந்து கிடக்கும்போது, இஃது, ஒரு தலைப்பாகை யணிந்து விளங்குவதுபோலத் தோன்றுகிறது. ஈதன்றி, துருவங்களில், உருகாத உறைபனி மாறாது நிற்குங் காட்சி, அழகியதொரு காட்சியாகும். சுக்கிரன், ஆறாம் பிறை வடிவாய்த் தோன்றும்போது, இதன் வடகோடும் தென்கோடும் வெள்ளிய முத்துமணி தரித்து விளங்குதல் போலத் திகழ்கின்றன. வெள்ளியின் துருவ மண்டலங்களுக்கும், நமது பூமியின் துருவ மண்டலங்களுக்கும், வேற்றுமையுண்டு. நமது பூமியிலே, நாடி மண்டலப் பிரதேசத்தில் உஷ்ணம் அதிகரித்தும் துருவப் பிரதேசங்களில் குளிர்ச்சி அதிகரித்தும் இருக்கின்றன அன்றோ?

குறுக்கோட்டம்:—இக் கோளம் சூரியனைச் சுற்றியோடும் காலத்தில், நமக்கும் சூரியனுக்குமிடையே, இது வருமாயின், பிரகாசமான சூரியனது முகத்தின் மீது, ஓர் ஈ குறுக்கே ஓடுவது போலத் தோன்றும். இதனையே, வெள்ளியின் குறுக்கோட்டம் (Transit of Venus) என்று வான சாஸ்திரிகள் வழங்கி வருகின்றனர். இது, தூரதிருஷ்டிக் கண்ணாடிக்கன்றி, நமது ஊனக்கண்ணுக்குப் புலனாகாது. புதக்கிரகமும், இவ்வாறு, குறுக்கே ஓடுவது உண்டு. ஆனால், அதனைக் காண்பது மிக அருமை. இவ் வெள்ளியின் குறுக்கோட்டம், எட்டு வருடங்களுக்கு ஒரு முறை நிகழ்கின்றது. இக்குறுக்கோட்டத்தைக் கொண்டே, சூரிய மண்டலத்திற்கும் நமக்கும் உள்ள தூரத்தைச் சரிவரக் கணக்கெடுக்கின்றோம். இது நிகழ்வதில்லையானால், நமக்கும் சூரியனுக்கும் இடையுள்ள தூரத்தை, இக்காலத்தில் நாம் கண்டறிந்திருப்பதுபோல, அவ்வளவு தெளிவாக, வரையறுத்து நிர்ணயித்தல் கூடாதாகும்.

உப கிரகங்கள்:—சில காலத்திற்கு முன்னர்ச் சுக்கிரனுக்கும் புதனுக்கும் இடையிலே, கறுத்த கோளம் ஒன்று இருந்ததெனச் சில வான சாஸ்திரிகள் கூறிவந்தனர்; அதற்குக் கருமான் (Vulcan) என்றும் பெயரிட்டனர். பின் நிகழ்ந்த ஆராய்ச்சிகளில், ஈதொன்றும் தூர திருஷ்டியிற் புலனாகவில்லை. ஆதலால், அத்தகைய கோளம் ஒன்று உண்டென, இக்காலத்தில் ஒருவரும் நம்புவதில்லை. நம்முடைய பூமியைச் சுற்றிச் சந்திரன் ஓடுவதுபோல, இவ்வெள்ளியையும் புதனையும் சுற்றி ஓடுகிற உபகிரகங்கள் ஒன்றும் இல்லை. இவர்கள் இருவரும், உபகிரகங்களாக எந்த மட்டவாரையும் இச்சியாது, அங்கையில் அனலேந்திக் கல்வியிலேயே கருத்தாய்ச் செல்லும் நித்திய பிரமசாரிகளாய்த் தம் குருவாம் சூரியனைச் சுற்றி வலம் வருகின்றனர். இப்பூமிக்கும் உள்ளாக நிற்கும் இவற்றைக் கீழ்க்கோள்கள் (Inferior Planets) என்றும் வழங்குவர்.

199213

KALANILAYAM
REG. NO. M. 2324.

## வர்த்தமானம்

படியாதவர்களுக்குத் தண்டனை:-சீனா தேசத்தில் நாங்கிங் நகரில் 6 வயதிற்கு மேல்பட்டும் 50 வயதுக் குட்பட்டும் சுமார் 5 லட்சம் பேர் எழுத்து வாசனையே சிறிதுமின்றி இருக்கிறார்கள். இந்த அவமானநிலையைப் போக்க 1936-ம் வருஷம் மே மாதத்திலிருந்து ஒரு வரி போடப்படுமென்று தெரிகிறது. மேற்குறிப்பிட்ட எந்தச் சீனரையும் போலீஸ்காரன் நிறுத்திப் பரீட்சை செய்யலாம். பதில் திருப்திகரமாக இல்லாவிட்டால் அவர்களுக்கு அபராதம் விதித்து உடனே வசூலிக்கப்படும். அபராதம் விதிக்கப் பட்டவர்க்குக் கார்டியன் இருந்தால் அவரிடமும் அபராதம் வசூலிக்கப்படுமாம்.

* * * * *

செடி மந்திரவாதி:—உலகில் இப்பொழுது பற்பல அதிசயங்கள் நிகழ்ந்துகொண்டிருக்கின்றன. இந்த அதிசயங்களெல்லாவற்றிலும் வியக்கத்தக்க அதிசயங்களை இவான் முட்சுரின் என்ற ருஷ்யர் செய்து வருகிறார். இவருக்குச் செடி மந்திரவாதி என்ற பெயரும் பொருந்தும். இந்த 75 வயதுள்ள மிட்சுரின் தனது தோட்டத்திலுள்ள மரங்களின் பழங்களை அதன் சாதாரண அளவுக்குமேல் பெருக்கச் செய்கிறார். ஆப்பிள் மரங்களில் பெரிய பழங்களைக் காய்க்கச் செய்கிறார். திராட்சைகளும் வேறு பல பழங்களும் இவர் செய்கின்ற முறையில் மிகப் பெரிய பெரியதாய்ப் பழுக்கின்றன. இவர் இன்னும் 3000 விநோதமான செடிகளைக் கண்டுபிடித்திருக்கிறாராம். இவர் போலவே இதற்கு முன்பு டாக்டர் பர்பாங் என்பவர் புளிக்கும் பழங்களைத் தித்திக்கவைத்தும் சிறிய பழங்களைப் பெரியதாக்கியும் இன்னும் செடிகளில் பல விநோதங்களையும் செய்துவந்தார். இவர் அமெரிக்கர். இவர் சில ஆண்டுகளுக்குமுன் காலமானார்.

* * *

குதிரையின் சக்தி:—குதிரை உணவில்லாமல் நீரை மட்டும் பருகிக்கொண்டு 25 நாள் வசித்திருக்கும்; பதினேழு நாள் வரையில் ஆகாரமும் தண்ணீருமில்லாமல் பிழைத்திருக்கும். தண்ணீரில்லாது கெட்டிப் பதார்த்தத்தை மட்டும் தின்றுகொண்டு 5 நாள் ஜீவித்திருக்கும்.

* * *

ஆட்டின் வால்:— ஆடுகளுக்கு மேல்வாய்ப்பல் கிடையாது. சில தேசங்களிலுள்ள ஆடுகளுக்கு வாலில் அதிக பலம் இருக்கிறதாம். பெரிய வண்டிகளையெல்லாம் வாலில் கட்டிவிட்டால் அவை இழுத்துக்கொண்டு செல்லுமாம். அவ்வாலில் மிகுந்த கொழுப்பிருப்பதாக ஆராய்ச்சிக்காரர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

* * *

முயல் வளர்ச்சி:—இரண்டே இரண்டு [illegible] நான்காண்டுகளில் 1,250,000 முயல்க[illegible] டிக்கக் கூடுமாம்.

உடம்பை மூடுவது எதுவானாலும் அதுவே உடை என்று அனேகர் எண்ணிவிடுவது போல, மனிதர் கண்களுக்குப் பொதுவாக எல்லா இன்ஷூயரன்ஸ் பாலிஸிகளும் ஒரே மாதிரியாகத் தோன்றலாம். ஆனால், பகுத்தறிவும் அழகின் தரமும் தெரிந்தவர், உடை எவ்வாறு தைக்கப் பட்டிருக்கின்றதென்பதையும், அது நெடுங்காலமாக ஸ்தாபிக்கப்பட்டிருக்கிற தையற்காரர் இடத்திலிருந்து வருகிறதா வென்பதையும் கவனிப்பார்கள். 'நாஷனல்' பாலிஸிக்கு இந்தச் சிறப்பு முத்திரை யிருக்கிறது, கல்கத்தாவில் ஹெட் ஆபீஸ் உடைய

**நாஷனல் இன்ஷூயரன்ஸ் கம்பெனி லிமிடட்**

கொடுக்கின்ற ஒவ்வொரு பாலிஸிக்கும் முப்பது வருடத்திய திறமை வாய்ந்த இன்ஷூயரன்ஸ் காரியானுபவம் ஆதாரமா யிருக்கிறது.

அஸ்ஸெட்ஸ் 2½ கோடிக்கு மேல்
நடைமுதல் பிஸினஸ் 10 கோடிக்கு மேல்

எஜென்ஸி எடுத்துக்கொள்ள விரும்புகின்றவர் கீழ்க்காணும் விலாஸங்களுக்கு எழுதவும்.

ப்ரான்ச் ஸெக்ரடரி, நாஷனல் இன்ஷூயரன்ஸ் பில்டிங், 362. சைனாபஜார் தெரு, சென்னை.

ஆர்கனைஸிங் ஸெக்ரடரி, ஸப் ஆபீஸ், 171. ந்யூ ஸ்ட்ரீட், மதுரை.

சீப் ஏஜன்ஸி, ஆர்காட் ஸ்ரீனிவாசார் தெரு, பெங்களூர் ஸிடி.

நெருப்பு மோட்டார் விபத்துக்கள்,

அஸ்ஸோஸியேடெட் நாஷனல் பையர் அண்ட் ஜனரல் இன்ஷ்யூரன்ஸ் கம்பனியால் (லிமிடெட்) இன்ஷ்யூர் செய்யப்படும்.

**இண்டோ-கம்மர்ஷியல்**

**பாங்க், லிமிடெட்.**

**மாயவரம்**

சென்னை ஆபீஸ், 107. அரண்மனைக்காரத் தெரு

பஜார் பிராஞ்சு, 260. சைனாபஜார் ரோட்,

மதுரை, காரைக்குடி, விருதுநகர்,
கும்பகோணம், திருவாரூர்,
ஈரோடு, தூத்துக்குடி,
விஜயநகரம்,
புதுக்கோட்டை,
திருநெல்வேலி.

சப்-ஆபீஸ்
சீர்காழி & சிதம்பரம்

எல்லா வகையான பாங்கி அலுவல்களும் ஏற்றுக்கொள்ளப்படும். நிபந்தனைகள் எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

S. N. N. சங்கரலிங்க அய்யர்,
மானேஜிங் டைரக்டர்,
107. அரண்மனைக்கார தெரு, ஜி, டி. மதராஸ்.

**சிறந்த பலவிருத்தி ஔஷதம்**

சென்ற 53 வருஷங்களாகப் பேரும் புகழும் பெற்று உலாவி வருகின்றன.

**ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்**

மலச்சிக்கல், தேகஅசதி நரம்புகளின் தளர்ச்சி, ஞாபகக் குறைவு முதலிய வியாதிகளைக் கரஸ்தமாகக் கண்டிக்கும்.

32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு விலை ரூ. 1

இனும்! "காம சாஸ்திரம்" இனும்!!

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26 பிராட்வே, மதராஸ்.

Printed at the B. N. Press, Mount Road, and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)